உ

ஸ்ரீசற்குருவேநம:

நவநீதசாரம்.

இஃது

வசனரூபமாய்

சகலவேதாந்தசாஸ்திரார்த்தங்களுமடங்கியிருக்கின்

றபடியால் மூமுட்சுக்களிற் கற்றவர்களன்றி

மற்றவர்களும் எளிதிலறிந்து

மோட்சானந்தத்தைப்

பெறும்படியான உபகாரார்த்தத்தைக்

கருதி

சேலஞ்சில்லா சிவில் கோர்ட்டு-வக்கீல்

ம-ா-ா-ஸ்ரீ.

அப்பாசுவாமிபிள்ளை

அவர்கள்

வினாவிடைகளாக்கிப் பிழைபறப் பரிசோதித்து,

அச்சிட்டுத்தருகவெனக் கேட்டுக்கொண்டபடி

பாரிப்பாக்கம்.

முனியப்பமுதலியாரால்

தமது

மெய்ஞ்ஞானவிளக்க அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

குரோதன (வரு) - ஆடிமீ.

பிரகரண அட்டவணை.

பக்கம்.

பாயிரம் ... ௯
முதலாவது வயிராக்கியப்பிரகரணம் ... ௨
இரண்டாவது முமுட்சுப்பிரகரணம் ... ௰௧
மூன்றாவது உற்பத்திப்பிரகரணம் ... ௰௪
நான்காவது திதிப்பிரகரணம் ... ௫௰
ஐந்தாவது உபசாந்திப்பிரகரணம் ... ௫௭
ஆறாவது நிருவாணப்பிரகரணம் ... ௱௪

ஆக பிரகரணம் — ௭.

பிரகரண அட்டவணை முற்றிற்று.

சேலஞ்ஜில்லாகீழ்க்கோர்ட்டு - வக்கீல்.

ம. ள. ள - அப்பாசாமிபிள்ளையவர்கள் இயற்றிய

கட்டளைக்கலித்துறைகள்.

திருமேவுநிறைந்துவளர்செந்நெல்மேவுந்தென்குண்டிகுசத் ... *
குருவேமுனியப்பக்கோவே முமுட்சுக்குமாங்கள்பவப் ... *
பெருநோயிலைநீத்தருள்நீதாரகத்தைநப்பேசுமன்பிற் ... *
பரிவோடிமைச்சிற்பதிவுறச்செய்தருண்பாக்கியமே ... *

கற்றவரோயனிதத்தெம்மரேகுருங்குசிதவைய ... *
முற்றறிவாளன்முனியப்பதேசிகன்மோகவிருட் ... *
குற்றங்கடியுறவிதாரகத்தைச்சுருக்கட் ... *
பெற்றவர்புகழ்மெய்ஞ்ஞானவச்சிற்பதித்தனனே ... *

சிறப்புப்பாயிரம்.

ஆசிரியப்பா.

மலர்தலையுலகின் மன்னுயிரனைத்தும்
அலர்தருவெம்மலைகப்பட்டுழலும்
கிருமியேபோலக்கிடந்தாணவமுதல்
திருமுதலில்லாத்தியமும்மலத்தளைப்
பட்டுழர்ச்சித்தபல்வகைத்துயராம்
விட்டுபவமுநாசஞ்சிவமேயென்னச்
சிறந்துளவமலநூற்செப்பிலெண்ணிலதா
நிறைந்தவாரியர்களிசழ்த்தினரவற்றொன்
றாகியஞானவமாம்பொருளமைந்து
போகியும்புகன்றிடப்பொருந்தாச்சிறப்புறு
நவநீதசாரமாநாளிலத்ததனை
அவமறவிளங்கவைத்தருளுகியென்னக்
கங்காகுலமாங்கலசவாரிதியில்
மங்காமதியெனவந்தவதரித்தோன்
நலமிகுசுப்பராயநரேந்திரன்
குலவுமாதவத்திற்குமரனென்றுதித்தோன்
பல்லான்றகேள்வியோர்பயிறருசேலஞ்
ஜில்லாசிவில்கோர்ட்டினில்வக்கீலெனும்
அப்பாசுவாமியாமபிதானத்தோன்
செப்பார்நகைப்பிருசேர்தடந்தோளினன்
புகன்றனனதுகப்புகாறக்கனைத்து
திகரிலாவவதாரிகைமுதனிறீஇ
எழுதாவெழுத்திலியையவித்தனனெனிர்
செழுமாமறையினர்தேடுமோர்பொருளோ
அம்பேயாலியாயமைநரல்போல
இம்பர்நாட்டுள்ளவெம்போலியரும்
எளிதினிற்றுத்திபெய்தவுருப்புனைஇ
தெளிவந்தாண்டருண்மெய்க்குருமூர்த்தி

சிறப்புப்பாயிரம்

அருத்தியோடன்பாகமகிழ்ந்திறைஞ்சத்
திருத்துருத்தியெனுந்தெய்வப்பதியுறை
இந்திராபீடத்திறைகரபாத்திர
னந்தமலர்ப்பதமேயத்துமன்பகலாத்
தேசிகன்றத்தாத்திரயயோகீசன்
வாசமார்மலரடிவணங்குசெங்கமல
நாதனடிமுடிநண்ணிடப்பெற்றோன்
கோதமாரரிகிரிகுலைவிழ்நாகை
அருணசலகுமாரியணியிணையடி
தெருளார்மனத்திற்றிகழ்வுறக்கொண்டோன்
கட்டொரியலரிக்கடையரிக்கடையிசை
பெட்புறவிசைக்கும்பிறைதசகாதரன்
சலகுருசிரோமணிதகைமைசேர்பொற்கழல்
மலமயக்ககமகிழ்ந்துளங்கொள்வோன்
உறுபசுங்கதிர்வயலுலவிடுமள்ளர்தம்
சிறுமியர்வரிவிழிச்சிறந்ததம்பெடையென
றுன்னிவாழளிக்குலமுடக்கிடுநளினியும்
மன்னிபர்வழுவையிற்கடிப்படுமாசின்
அதிர்குரலொலியுமறத்தவர்தம்மடம்
எதிர்ந்தோரிறைஞ்சிநின்றேத்திடுமோதையும்
அந்தணர்மறைநூலாயுமாரவமும்
செந்தமிழாற்பரன்றிருவடிபழிச்சும்
ஆம்பியுமொன்றியாயிரமம்பகன்
மேம்படுமூர்றியின்மிகுமியமடக்கும்
பாரிப்பாகையான்பல்வேதாந்த
வாரிணையுண்டுவளமுறுமடன்பாம்
வைங்கூழ்தழைப்பப்பகருமுறுபவந்
தங்கமாமழைபொழிதாமுகிலுள்ளம்
கனியப்பரவோர்க்கருளும்
முனியப்பராமமுதுதயத்தோனே

இஃது - காஞ்சீபுரம் - இராமசாமி நாயகர் இயற்றியது.

உ

ஸ்ரீசற்குருவேநம

நவநீதசாரம்.

காப்பு - பாயிரம்.

விநாயகர் - வணக்கம்.

ஆரணமுதலாச்சொல்லு மாகமமனைத்துந்தேர்த்தும் ... ❋
வாரணமுகவன்றனை வணங்கின்முக்காரணத்தாலும் ... ❋
காரணவறிவின்கண்ணாய்க் கற்பனைக்கடந்தஞான ... ... ❋
பூரணநவநீத போதமங்கருளுந்தானே ... . (௧)

அருளிறை-வணக்கம்.

சொப்பிரகாசவகண்டிதந்நிசமாஞ்சோதியாய்நிறைந்த மெய்ஞ்ஞானந் ❋
தற்பரமானசிவமெனும்பிரதந்தானுமேகத்கண்டாய்ச்செலிதமே ... ❋
யுற்பவமானசுகதுக்கத்தமிழாதொருப்படுமாறெனக்களித்த .... ❋
சிற்பரமானவரங்கதேசிகன்றன்திருவடிசென்னியிற்சேர்ப்பாம் .. (௨)

நூல்வரலாறு.

வேறு.

கிடைத்தவேதாந்தவெண்ணெய்க் கட்டியாய்த்திரட்டிமுன்னோர் ... ❋
திடம்படவைத்தாரத்தைச் சேரவேயுருக்கிநன்று ... ... ❋
மிடம்படநவநீதத்தின் சாரமாய்வருந்தெளித்தை ... ... ❋
படைத்தவர்படைமநீங்கி யல்லலற்றினிதுவாழ்வார் .... (௩)

சிறப்புப்பாயிரம்

அருந்ததியோடன்பாகமகிழ்ந்திறைஞ்சத்
திருத்துருத்தியெனுந்தெய்வப்பதியுறை
இந்திரபீடத்திறைகரபாத்திர
எந்தைமலர்ப்பதமேத்துமன்பகலாத்
தேசிகன்றெத்தாத்திரயயோகிகள்
வாசமார்மலரடிவணங்குசெங்கமல
நாதனடிமுடிநண்ணிடப்பெற்றோன்
கோதமாநதிவரிதுலைவிவாழ்நாகை
அருணாசலகுமாரியனிணையடி
தெருளார்மனத்திற்றிகழ்வுறக்கொண்டோன்
கட்டொரியலரரிக்கடைவரிக்கடையிசை
வெட்புறவிசைக்கும்பிறைசைவாழ்குரு
சலகுருசிரோமணிதலைமைசேர்பொற்கழல்
மலமயக்கலமகிழ்ந்துளங்கொள்வோன்
உறுபசுங்கதிர்வயலுலவிடுமள்ளர்தம்
சிறுமியர்வரிவிழிச்சிறந்ததம்பெடையென
றுன்னிவாழளிக்குலமூடக்கிடுதுழனியும்
மன்னிபர்வத்தைவயிற்கடிப்படுமுரசின்
அதிர்குரலொலியுமறத்தவர்தம்மை
எதிர்த்தோரிறைஞ்சினிற்றிடுமோதையும்
அந்தணர்மறைநூலாயுமார்வமும்
செந்தமிழாற்பரன்றிருவடிபழிச்சும்
ஆர்ப்பியுமொன்றியாயிரமம்பகன்
மேம்படுமூர்தியின்மிகுமியமடக்கும்
பாரிப்பாகையான்பல்வேதாத்து
வாரியையுண்டுவளமுறுமன்பாம்
பைங்கூழ்தழைப்பப்பகருமறுபவத்
துங்கமாமழைபொழிதாமுகிலுள்ளம்
கனியப்பரசவோர்க்குருளும்
முனிப்பநாமமூதுநயந்தோனே

இஃது — காஞ்சீபுரம் — இராமசாமி நாயகர் இயற்றியது.

உ

ஸ்ரீசற்குருவேநமாஃ

நவநீதசாரம்.

காப்பு - பாயிரம்.

விநாயகர் - வணக்கம்.

ஆரணமுதலாச்சொல்லு மாகமமனைத்துப்பேர்த்தும் ... ✻
வாரணமுகவன்றனை வணங்கின்முக்கரணத்தாலுங் ... ✻
காரணவறிவின்கண்ணாய்க் கற்பனைக்கடந்தஞான ... ... ✻
பூரணகைவதீத போதமங்கருளுந்தானே ... . (௧)

அருளிறை-வணக்கம்.

சொப்பிரகாசவகண்டிதநிசமாஞ்சோதியாய்நிறைந்த மெய்ஞ்ஞானத் ✻
தற்பரமானசிவமெனுமிரதத்தானுமேகத்கண்டாய்ச்செனித்தே ... ✻
யற்பவமானசுகதுக்கத்தமிழாதொருப்பமொறனைக்களித்த .... ✻
சிற்பரமானவரங்கதேசிகன்றன்றிருவடிசென்னியிற்சேர்ப்பாம் .. (௨)

நூல் வரலாறு.

வேறு.

கிடைத்தவேதாந்தவெண்ணெய்க் கட்டியாய்த்திரட்டிமுன்னோர் ... ✻
திடம்படவைத்தாரத்தைச் சேரவேயுருக்கிநன்று ... ... ✻
யிடம்படநவநீதத்தின் சாரமாய்வகுத்தேனித்தை ... ... ✻
யடைந்தவர்மடமைநீங்கி யல்லலற்றினிதுவாழ்வார் ... ... (௩)

அவையடக்கம்.

நாலுவொன்றுந்தானுகா நாலுவாலவொருபொருளைத் ... ...*
நாலுமுளக்கண்ணை தலைத் தன்மையுணர்ந்தோர்க்கிடைபுகலல் ... *
மானுகந்தான்மணிப்படத்தால் வையஞ்சமைப்பமற்றதன்முன் ....*
மூறாகந்தான்சமைப்பவெனும்புன் மையறிவைநிகர்க்குமால்... ... (அ)

பாயிர-முற்றிற்று.

உ

முதலாவது.

வயிராக்கியப்பிரகரணம்.

நூல்.

அவதாரிகை.

இந்நூலாசிரியர் தாமடைந்த நிரதிசயானந்த சாட்சாத்காரசுவாநுபூதிப் பிரத்தியட்சத்தை முமூட்சுக்கள் எளிதினுணர்ந்துநித்திய திருப்தியாகும்பொருட்டுக்கிருபைகூர்ந்து வயிராக்கியப்பிரகரணம் - முமூட்சுப்பிரகரணம் - உற்பத்திப்பிரகரணம் - திதிப்பிரகரணம் - உபசாந்திப்பிரகரணம்- நிருவாணப்பிரகரணம்-என்னும், அறுவகைப்பிரகரணங்களால் இந்நூலினிதுமுடிக்கத்தொடங்கி பூர்வஜென்மசன்மஸ்காரபலத்தினுல்கிஞ்சித்து ஆவரணவிலட்சணைப்பட்டு ஆத்மாநாத்மவிவேகம் பண்ணவந்தசீஷனுக்குப்பிரபஞ்சவயிராக்கியமுண்டாகும்படி முந்தி வயிராக்கியப்பிரகரணத்தைக்கூறுகின்றார்.

கவி.

தேகமேயான்மாப்போகஞ்சேர்ந்திடன்முத்தியாமென் ....*
தேகமின்றாகாய்த்தின்றிறந்தவர்பிறவாரென்ற .... *
மோகக்கவேரனைத்துநீக்கிமுத்தியையடைவதற்கே .. .. *
தாகமாயிருக்குமுத்தர்தானுமேதேவராவர் .. .. (க)

தேவர்மானிடராளுஞ்செனித்திடல்வளர்தன்மாய்தன் ... ... ✻
மூவகையிடத்துந்துன்பமாதலான்மோகமென்னுஞ் ... ... ✻
சீவனுட்பற்றைநீக்கச்சிந்தித்தெத்திறத்தாலுந் ... ... ✻
தாவுமால்துடைத்தல்வேண்டுஞ்சற்குருசகாயத்தன்றே ... ... (உ)

இதன்பொருள்.

வினா. தேகமேயான்மாவல்லாமல் உள்ளேயாகிலும் வெளியேயாகிலும் ஆன்மாவேறில்லையென்னில்.

விடை. கரணங்களிருக்கிறபடியாலப்படிசொல்லக்கூடாது.

வினா. மனமொன்றேதவிரவேறுகரணங்களுமில்லை - போகங்களில்ஸ்திரீசையோகமேமுத்தி - அவர்களைச்சதாகாலமும் நினைத்திருப்பதே கல்வி - சதாகாலமும் அவர்கள் விசாரத்தினாற்சரீரமிளைப்பதே தவம் - சார்வதாஅவர்களுடன்சரசவுல்லாசமாய் வசனித்திருப்பதேசிவன்முத்தி - எப்போதும்அவர்களது ஸ்தனங்களிற்கூடிச்சையோகவின்பத்திலமிழ்ந்தியிருப்பதே விதேகமுத்தி - அவர்களணிந்துள்ள புஷ்பசந்தனாதிகளின் மணங்களை ஆக்கிராணித்திருப்பதேசுவர்க்கபோகம் - அவர்களதரபானமே தேவாமிர்தம் - இப்படிப்பட்டமதத்தைவிட்டுப் பிரிந்தவனேநரகத்தையடைவன் - இறந்தவர்களொருகாலத்தும் பிறப்பதேயில்லை - அப்படிபிறப்பதுண்டானால் முன்னுள்ளவறிவு இப்போதிருக்கவேண்டும் - அப்படிகாணாமையால்தேகமேயான்மா - போகமேமோக்ஷம் - இறந்தவர்கள்திரும்பவும்பிறவார்களென்பதேநிச்சயமென்னில்.

விடை. இப்படியுளறிக்கொண்டு மிருகபட்சிகளைப்போல அறிவில்லாதவர்களாய் அருந்தல் பொருந்தல்மாத்திரமாய் வீண்காலம்போக்குவார்களாகில் அவர்களுக்குநரகமேயன்றிமோட்சமில்லை - மேலும்நாமிறந்தால் நமக்கிருப்பிடமெங்கே - நாமெங்கேயிருந்துவந்தோம் நமக்குக் கதியேதென்றுவிசாரிக்கறியவொட்டாமல் அவர்கள்புத்தியை மறைத்திருப்பது அஞ்ஞான காரியமல்லாமல் வேறல்ல.

வினா. அஃதெப்படியென்னில்.

விடை. தேகமே அறிவுடையவான்மாவென்றால், தேகமிருக்குங்காலமெல்லாம்அறிவிருக்கவேண்டுமே அப்படிகாணாதபடியினால்தேகமு

ணமாய்க்கிடக்கும்போது அறிவாகியவுயிர்போய்விடுதலால் தேகத்திலுள்ள
அறிவாகியதேயொருவனுண்டு - அவன் இத்தேகத்தைவிட்டுப்போகை
த்திற்போனதால் இத்தேகம்பிணமாய்க்கிடக்கின்றது - ஆகையினால் தேக
தேகியொருவனுண்டென்றுந்தேகம் ஆன்மாவல்ல ஜடமென்றுந் தள்ளப்
பட்டது.

வி-ழு. ஸ்திரீபோகமேமோட்சமல்லவென்பதெப்படியெனில்.

விடை. மலங்களைப்புசிக்கவேண்டுமென்றிச்சித்துத்திரிகின்றவுணர்ப்பன்றி
யானது அன்னியரால்விடப்பட்ட அசுத்தமானமலங்களைப்புசி
த்துக்கொண்டயானைவெய்யிலால் தபித்துச்சூடுகொண்டுவருமப்போதில் அசு
த்தமாகியசாக்கடைச்சேற்றைக்கண்டு அதில்போய்விழுந்துபுரண்டு அவ்வ
சுத்தநீரைக்குடித்துத் தன்னினைப்பாகிய தாகசோகந்தணிந்து சுகித்தி
ருப்பதுபோலவே ஜீவன் ரத்தமாம்ஸமலமூத்திரநிட்டான துர்க்கந்
தங்களைநிறைந்து அனேக ஜென்மங்களிற்செய்துள்ள பஞ்சமாபாதகங்க
ளனைத்தடிபொல்லாங்குகக்கட்டிப் பிரமன் ஒருபெண்வடிவாகச் சிருஷ்டித்
த்தவைத்தபாபரூபத்தைக்கண்டு சுகமென்றிச்சித்து அவர்கள் அச்சிலாகிய
வாயிநீரையுண்டு தனங்களாகிய மாமிசக்கட்டிகளிலேறுந் தொங்குமாகிய
சமல்களோடுமிருக்கண்களிலொற்றிக்கொண்டு யோனியாகிய வுப்பளத்
தில்விழுந்து தாகமடங்குவேயின்பமென்றுசுகித்திருப்பன் - இந்த
துன்பமும் அசுத்தசாக்கடைச்சேற்றில்விழுந்து புரளுகின்ற உணர்ப்பன்றி
யுடையதும் ஒக்குஞ்சரியாம் - ஆகையால்பரிசுத்தமாகிய மோட்சவிருப்பமுடையவர் அ
ன் சுத்தநிர்த்தராயிருக்கின்ற ஈஸ்வரானுக்கிரகம்பெற்று அடிமைத்திறத்
தெய்வின்பெரியோர்களைக்கண்டுபூசித்து அவர்களால்ஞிக்ஷியங்களாயி௫
த்தப்பட்டமோட்சத்தைப்பெறுவார்கள் - அங்ஙனமிருக்கப் போகமே
மோட்சமென்பதுகூடாது இறந்தவர்கள் பிறப்பார்களென்பதே துணிவு.

வி-ழு. இறந்தவர் பிறப்பாரென்பதெப்படியெனில்.

விடை. சாக்கிரத்தில்மகாராச்சியம்பண்ணும்போது ஜீவன் ஆசத்தியாய்
நினைந்தபொருள்களெல்லாந் தத்தக்கைவிட்டுச்சொப்பனவலவை
யில்சத்தியமாய்க்கண்டனுபவிப்பதுபோல இந்தப்பிறப்பில் ஆசத்தியமா
யெதிரிருந்த வாசனைகளே மரணமடையும்போது மறுபிறப்புக்கு வித்
தாகி அநாதியானசரீரங்களையெடுத்தனுபவிப்பதென்பதே துணிவு.

வினா. இறந்தவர்கள் மீண்டும்பிறப்பது மெய்யானல்முன்னுள்ள நினைவுகள் தோற்றவேண்டுமே யென்னில்.

விடை- இறந்துபோன பத்திராயித்திராதிதாய்தகப்பனுஞ் சொப்பனவஸ்தையில மெய்யாகவந்திருக்கக்கண்டனுபவிக்கும்போது இது பொய்யென்று ஒருவருமே அறியவில்லை முன்னமே இவர்களிறந்துபோனார்களென்று சாக்கிரத்திலறிந்திருந்த சீவன்தானே இப்போதுஞ்சொப்பனங்காணுகிறான் இவனுக்கேன் முன்னுள்ள நினைவுகள்தோற்றவில்லை. ஆதலாலிறந்தவர்கள் பிறந்தாலுமுன்னிருந்தநினைவுகள் தோற்றாதென்பதே துணிவு.

வினா. அப்படித் தோற்றாமைக்குக்காரணமேதென்னில்,

விடை. இந்தச்சீவன் தூலதேகத்துடன்கூடி இந்திரியவிவகாரமான சாக்கிரத்திருந்து பிறகு தூலதேகத்தைவிட்டுச் சூக்ஷ்மதேகத்தை யபிமானித்ததினால் முன்னுள்ள நினைகள் தோற்றவில்லை இப்படியே எழுவகைப்பிறப்பிலுமுண்டான நினைவுகளு மந்தந்ததூலதேகத்தைவிட்டு மறுபிறப்பாகிய வேறொருதேகத்திற்புகும்போது இந்தச்சீவன் மரணவஸ்தையினிற் பட்டதனாற்றெரியவில்லை ஆதலால் இறந்தவர் பிறவாரென்ற விதி தள்ளப்பட்டு இறந்தவர் பிறப்பாரென்ற சித்தாந்தமே கொள்ளப்பட்டது.

வினா. ஆனல்சிலர்தேவபோகத்தைக்குறித்து யாகாதிகருமங்களைச்செய்கின்றார்களே அதனுலின்பமில்லையோவெனில்,

விடை. அந்தத்தேவப்பிராப்தியு மின்பமில்லை - எப்படியென்றாலிந்த வஞ்ஞானிகளிற் பிறக்கிறகைலத்திலிருக்கும் திரிகாலத்திலும் பிரமாதிதேவர்களாலும் ரிஷீஸ்வரர்களாலும் ஒருவர்க்கொருவரால் நேரிடும் அன்னியோன்னியசாபத்தினாலும் ஒருவர்பெண்சாதி தன்னை யொருவரபகரிப்பதினாலும் ராக்ஷதர்கள்தங்கள் போகபூமியைப்பிடுங்கிக்கொண்டு அடித்துத் துரத்திவிடுவார்களென்கிறபயத்தினாலுந் துன்பமேயல்லாமல் எள்ளளவுமின்பமில்லை - மரணகாலத்திலும் முன்செய்துள்ள யாகாதிகர்மபலத்தினால் சுபத்தொரு சதுர்யுகம் ஆனந்தம்போக

மனுப்வித்துத்தீர்ந்தவுடன் அங்குள்ளதேவதைகளால் பிடித்துத்தள்ளப் பட்டுநட்சத்திரங்களாகித்தலைகீழாய்ப் பூமியிலெரிந்துவிழும்போது அவ்வானந்த மறந்தனித்தியுமாய்ப் போவதினாலும் மீண்டுற்பவிக்குங்காலத்திலும் முன்பு பசுபந்தனம்பண்ணின பாவகர்மத்தினால்பூமியில் நாக்குப்பூச்சி கிருமிகளாய்ச் செனிப்பதினாலுந் துன்பமென்பதே துணிவு.

வினா. ஆனாலிந்தமானிடப்பிறப்பில்தானின்பமில்லையோவெனில்:

விடை. இந்தமானிடயோனிகளிற்பிறக்கின்றகாலத்திலும் மாதாவின்கருப்பப்பையிற் கட்டுண்டு அவளது மலமூத்திரக்கிருமிகளினாலும் சூலாக்கினியிலும்வெதும்பி அவள் அன்னபானாதிகளை நிறையவுண்டபோது உடல் நெருக்கத்தினால் மூச்சுவிடுதற்கிடமின்றிய வருத்தத்தினாலும் அவளுண்ணாதபோது எழுகின்றஜடராக்கினியினால் சுடப்படுகிற பிரயாசையினாலும் பிறவிநோக்குங்கால் பிரசூதவாயுவினால் மொத்துண்டு ஆலையிற்பட்டகரும்புபோலும் செக்கிலிட்ட எள்ளுபோலும் யோனித்துவாரத்தினெருக்குண்டு மலைமேல்நின்றுதலைகீழாய்த் தள்ளுவதுபோல் பூமியிற்பிள்ளையாய் விழுகின்றதினாலுந் துன்பம் - இனி காலத்திலும் சைசவப்பருவத்தில்கணங்கள் பறவையாதிகளால்வருந்தோஷங்களினாலும், பாலப்பருவத்தில் காதுகுத்தல்சாமுதலிய பலவியாதிகளாற்படும் பிரயாசத்தினாலும், வாசித்தல்முதலியகருமங்களால் உபாத்தியாயர் முதலானவர்களாலுண்டாகும் வருத்தத்தினாலும், குமாரப்பருவத்தில் தனதானியங்களைச் சம்பாதிக்கவேண்டிவருகிறதாக மோகங்களினாலும், அதற்கிடையூறுவருவதினாலும், விடயபோகவிச்சையினாலும், அகங்காரமிருப்பதினாலும், படியாமற்போனதினாலும், படித்துந் தர்க்கங்கள்பேசவருவதினாலுந் துன்பம் - விருத்தபருவத்திலோவென்றால் ஆசைமிகுவதினாலும், நரைதிரைமூப்புகளினாலும், பலவியாதிகளுண்டாவதினாலும் மனைவிமுதலியோர்களுக்கு வியாதி வருதலினாலுந் துன்பம்ஒருவனுக்குப்பிராணாதாரமாயிருந்தபிள்ளைசாகவும், அந்நேரம்வீடிடிந்துவிழவும், உழுகிறமாடுசாகவும், கடன்காரர்வந்துமறிக்கவும், அடிமையாள்மறிக்கவும் வாராவிருந்துவரவும் வீட்டில்அரைக்காசளவில்லாமல் அயல்வீட்டில்கடன்கேட்க, அவர்களைக்கொடுக்கவொட்டாமல் முன்கடனாரம்பிக்கவும், இப்படிநானாவிததுன்பங்களினால் சாற்றசைவான

சலத்திற் பிரதிபிம்பித்த சந்திரன்போற் கலங்கப்படுகிற வருத்த முண்டாவதினாலுந் துன்பம் - மரணகாலத்திலும்வாத பித்த சுர க்ஷய ரோக குஷ்டமுதலான பலரோகங்கள் மேலிட்டுச்சீவத்துவம் பேதித்திருக்கிறபோது மரணக் கண்டதுபோல் வரும்பயங்களினாலும், நடுக்கங்களினாலும், ஊர்த்துவசுவாசத்தினாலும் வருந்திச் சிலேத்துமத்தில் கட்டுண்டு வேதனையான பிராணப்பிரயாணகாலத்திற் காண்கிற துக்கங்களினாலும், அப்படிப்பிராண னீங்கினபோது நெருப்பாற்றிலுங் கும்பிபாகமான நரகத்திலும் கடுகிறயாறையிலும் அசிபத்திரவனத்திலும் வீழ்த்தி, யமபடாள் தண்டிக்கப்பட்ட யாதனைகளினாலுந் துன்பம் - இப்படித்தேவர் மானிடரென்னு மிருவகைப் பிறவிகளே துன்பமானால் ஏனையபிறவிகளாகிய மிருகபட்சி தாபராதிகளெல்லாம் துக்கசமுத்திரத்தழுந்தி பாவமான நரகங்களிற் படும்பாடுகளையெல்லா மிவ்வளவென்றளவிட்டுச்சொல்லமுடியாது ஆகையின் இந்தப்பிறவிக ணீங்குமார்க்கத்தையே விசாரித்தறியவேண்டும்.

வினா. விசாரித்தறியுமார்க்கமெப்படியென்னில்.

விடை. யானெனதென்னும் பற்றுக்களொழிந்தால் சீவத்துவங்கெடும். இந்த யானெனதென்னும் பற்றுக்களே சீவசொரூபம் இவ்விருவகைப்பற்றுக்களில் முந்தி எனதென்னும்பற்றைவிடவேண்டும்.

வினா. அஃதேதெனில்

விடை. பெண்சாதிபிள்ளைகள் கிரகம் பூமி தனதானியாதிகளை யென்னதென்றபிமானிப்பது ஆன்மாவுக்குச்சுபாவமல்ல - அது அறியாமையான மோகாந்தகார மூடபுத்தியினால்வந்தது.

வினா. அதற்குவிவரமெப்படியெனில்,

விடை. பெண்சாதியானவள் ஒரு தாய்தகப்பனுக்கு மகளாயிருப்பதினாலும் நீ ஒரு தாய்தகப்பனுக்குமகனாயிருப்பதினாலும் அவளொருத்தி நீயொருத்தன் இப்படி புறம்பாயிருக்க அவளென்பெண்சாதியென்னுஞ் சத்தியபுத்தி வரலாகுமா - உன்னைவிட்டு அவள்பிரிந்துபோய் விடுகிறாள் அவளைவிட்டு நீபிரிந்துபோய்விடுகிறாயாகையா லுனக்கவள்

வைராக்கியப்பிரகரணம்.

சொந்தமல்ல அவனை என்னதென்பதுகூடாது - பின்னும்பிள்ளையையெ
ன்னதென்றிருப்ப அந்தப்பிள்ளையை நீயாவுண்டாக்கினையா அல்லதுஉன்
பெண்சாதியாலுண்டாக்கப்பட்டதா அல்லது அன்னியர்களாலுண்டான
தாயிப்படியுங்களொருவராலுமுண்டாக்கப்படாதிருக்க வீணையயந்தவ
னுபிராந்தியேயமேலும் சொப்பனத்தில்பலபிள்ளை பெற்றதுபோலும் இ
ந்திரசாலவித்தையா வல்லவன்வித்தை காட்டுவதுபோலும்பிரமமிருட்டி
யிறுமிருவருக்கு நடுவே ஓர்பிள்ளையெனத்தோற்றியது இதனைப்படின
ன் பிள்ளையென்று சொல்லுவது தெருவிற்கண்டபிள்ளையை என்பிள்ளை
யென்றொருவன் சொல்லுவான் அதுபோலப்பிரமமிருந்திடியால் அந்தப்பிள்
ளை பிறன் பிள்ளையல்லாமல் உன்பிள்ளையல்லஆதலால்பிள்ளையையென்ன
தென்பதுகூடாது - அப்படியேயிந்தவீடுவாசல் பூமிதனதானியாதிசம்
பத்துகளெல்லாம்உன்தகப்பனலார்ச்சிக்கப்பட்ட படியினாலும் அவைவ
நோக்கி விசாரிக்குமிடத்து நீயவனுக்குப் பிள்ளையாகாமற் போகிறபடி
யினாலும் நீ இதுகளையும் என்னதென்பதுகூடாது.

வினா. அப்படிக்கல்ல நானே கஷ்டப்பட்டுத்திரவியங்களைச் சம்பாதித்து அதனால் வீடுவாசல் பூமியாதிகளைச் சேகரித்தேனே யென்னில்,

விடை. அப்படியானாலுமந்தத்திரவியங்களுமுன்னதல்ல,

வினா. அதெப்படியென்னில்,

விடை. திரவியங்களெல்லாம் ராஜாக்களுக்குச் சொந்தமானதால் இந்தத் திரவியங்களையுமென்னதென்பதுகூடாது.

வினா. ஆனால் பெண்டுபிள்ளை திரவியமென்கிற ஈஷணாத்திரயங்களென் னதல்லவென்றுபோனாலும் இந்தத்தேகமாவது நானென் றிருக்கிறேனேயென்னில்,

விடை. தேகமுமுன்னதல்ல நீ ஒருவரிடத்தில் இரவல்வாங்கினது.

வினா. அதெப்படியென்னில்,

விடை. நெடுங்காலமாய்ப் பிறப்பிறப்புகளாகிய துக்கங்களிற்பட்டுத்திரி யக்ஸ்தாவரங்களாய்ப்பிறந்துழைத்து அந்தப்பிரயாசையெல்லாம்

கிருபித்து விவேகத்திலிருந்து — நீ ஈஸ்வரனைநோக்கி இந்தச்ஜென்ம சாபல்லியமாய்க்கரையேறும்படியெனக்கோர்மானிடசரீரங் கொடுத்தருளுமென்றுபிறவிகள்தோறும் வேண்டினபடியாலீஸ்வரன்கிருபைகூர்ந்து நீ இந்தமானிடசரீரத்தைப்பெற்று நம்மைவேண்டி நிஷ்காமியவஞ்செய்து நமது திருவடிசுகத்தைப் பெறுவாயென்றிரவலாகக்கொடுத்தருளினார்.

வினா. அப்படியானால் அந்தக்காரணத்தை ஒருவருமே னறியவில்லையென்னில்.

விடை. கருப்பாசயத்திற் கட்டுண்டிருந்தினாலும் பிறவிநோக்குங்கால் பிரசூதவாய்வு பூரித்துத்தள்ளுவதினாலும் யோனித்துவார நெருக்கமுதலிய யாதனைகளாலும் முன்னுள்ளநினைவுகளெல்லாம் இந்தச்சீவன் மறந்து விட்டுப் பஞ்சபூதபௌதிகமாகியஇரவலான இச்சரீரத்தையுந் தானென்றுசத்தியபுத்திபண்ணிக்கொண்டபடியால் ஒருவருக்குங்காரணந்தோற்றவில்லை.

வினா. ஆனாலிரவலென்பதற்குஉவமானமெப்படியென்னில்,

விடை. ஒருபுருஷன் ஒருதொழில்செய்யக்கருதி அடுத்தவீட்டுக்காரனிடத்தில் ஒருகத்தியை யிரவலாகவாங்கிவந்து உடனே அந்தக்கத்தியின்மேல்வைத்த பிரியமோதப்பிரமோதங்களினா லிரவலென்பதுமறந்து சொந்தம்போலவைத்துக்கொண்டு அதனால்தானினைத்தகருமத்தை நிறைவேற்றிக்கொள்ளாம லிருந்துவிட்டான் அப்படியிருக்கச் சில நாளைக்குப்பிறகுகத்திகொடுத்தவன் சடுதியில்வந்துஎன் கத்தியைக் கொடுவென்றுகேட்க இவன்அவனுடையகத்தியென்பதுந் தானிரவல் வாங்கிவந்தது மறந்துவழக்குப்பேசமளவில் அவன்கோபங்கொண்டு இவனையடித்து வருத்திக்கத்தியைப் பிடுங்கிக்கொண்டு போவானேயல்லாமல்கத்தியைவிட்டுப் போகமாட்டான் — அதுபோல நீயும் ஈஸ்வரனிடத்தில் அனந்தஜென்மங்கடோறும் வருந்திக்கேட்டு இரவலாக வாங்கிவந்த இந்தச்சரீரத்தை இப்போதுபட்ட பிறவிமூர்ச்சை யினால்மறந்துயானெனதென்று சத்தியபுத்திபண்ணிக் கொண்டிருக்கிறாய்இனி யிப்படி இரவல்கொடுத்தவர்வந்து பறித்துக்கொண்டுபோய்விடு

வார். அப்போதுமுன்போலத் திரியக்ஜாதிகளாய்ப் பிறந்து துக் கமடைவதேயோ நாம்முன்சரீரமிருக்கும்போதே நல்லதவத்தைப்பண்ணி மோக்ஷமடையாமற் போனோமேயென்று புலம்பித்திரிகவேண்டுமல்லா மல் வேறில்லை.

வினா. ஆனான்முன்போலவே யிரவல்வாங்கிவந்து மறவாமல்தவஞ்செய் து மோக்ஷத்தைப்பெறுவேனென்னில்.

விடை. திரும்பவும் இந்தமானிடசரீரம் பெறுவதரிது.

வினா. அதேதெனனில்,

விடை. முன்கத்தியை யிரவல்வாங்கிவந்துதான் நினைத்தகருமமுமுடிக்கா மல் கத்திகொடுத்தவன்வந்து கேட்டவிடத்தில் தன்சொந்தமெ ன்று வழங்கிட்டதை மறந்துபின்னு மவனிடத்திற்போய் கேட்டால்புர வினிக்காரனென்றடித்துத் தள்ளிவிடுவானேயன்றி ஒருபோதுங்கத்தியிர வல்கொடுக்கமாட்டான் அதுபோலவெல்லா னிரவலாகக்கொடுத்த தேகத் தைத் நீ யானெனதென்றபிமானித்து அறியாமையினால்பொய்கொலைகள வு கட்காமமாகியபஞ்சமகாபாதகங்களையே முயன்று வழக்கிட்டுநின்றதா லினிஒருக்காலுமிந்தச்சரீரங்கிடைக்கமாட்டாது - ஆதலாலிந்தச்சரீரமு ம்விவேகமுமிருக்கும்பொழுதே யிரவலுடைமையென்றறிந்து தேகா திப்பிரபஞ்சங்களிலுள்ள வபிமானமெல்லாம் விட்டு நிஷ்காமியதவம்ப ண்ணி மோக்ஷத்தைப்பெறவேண்டுமென்றறிவாயாக.

வினா. ஆனால்யானெனதென்னுமபிமானமில்லாவிட்டால் விவகாரங்க ளெல்லாம் தாங்கினவனைப்பொருள் நழுவினாற்போல நழு வினிடுமேயன்றித்திடமாய்நடக்கமாட்டாது - ஆகையாலபிமா னமிருக்கட்டுமே அதனாலானியேதென்னில்.

விடை. ஓர்கிரகஸ்தனை பிராமணன் தன்கிரகத்தைவிட்டு கங்காயாத்தி ரை போகக்கருதி மறுவனவிற் குடியிருந்த ஒரேழைப்பிராமண னை யழைத்து நாங்கள்காசியாத்திரைபோய் வருமளவும் நீர் குடிக்கூலி யின்றிக் குடும்பத்துடன் எங்கள்வீட்டில் குடியிருந்துக்கொண்டு எங்க ள் வீடுவாசல்மாடுகன்று முதலானசகல பண்டபதார்த்தங்களையும்பத்திரமா கக் காப்பாற்றி நாங்கள்வந்தவுடன் எங்களிடத்தில் ஒப்புவிக்கவேண்டு மென்றுமுக்கு ஒருவாராகச்சம்பளந்தருவேனென்றுசொல்லி அந்தவேழைப்

பிராமணனைக் குடிவைத்துவிட்டு யாத்திரைபோய்க்காசிமுதல்கன்னியா
குமரிவரையிலுள்ள மூர்த்திதலம் தீர்த்தங்களைமுறையே தரிசித்துக்கொ
ண்டு சிலநாட்கழித்தபின் தன்வீட்டுக்குத் தன்கிரஹணியோடுவந்துசே
ர்ந்தான் - அந்தப்பிராமணனைப்பார்த்து குடியிருந்த ஏழைப்பிராமண
ன் நீங்களாரென்றுகேட்க, நாங்களுன்னை இந்தவீட்டிற்குடிவைத்துவிட்
டுக்காசியாத்திரை போனவர்களல்லவா இப்போது நாங்கள் ஜீவந்தராய்
வந்துசேர்ந்தோமாதலால்எங்கள்வீடுவாசல் முதலிய வெல்லாம் ஒப்பித்
துப்போட்டு உன்சம்பளத்தைவாங்கிக்கொண்டு போவென்றுசொல்லஅ
ந்தவசனத்தைக்கேட்டுகோபங்கொண்டுவீடாவதேது வாசலாவதேது கு
டிக்கூலிக்கு வைத்துப்போவதாவதேது உனக்கேதாவது பயித்தியம்பி
டித்ததோவென்றுகூவி நீ முன்புதானே இந்த வீடுவாசல்களை விற்பனை
செய்து விட்டுப் போயினையே அதற்குவிக்கிரயசாதனமிருக்கிறதென்
று அபிமாலித்து வழக்குப்பேச அதுகேட்டகாசிவாசியும் நியாயஸ்தலத்
திற்போய் கூகூவென்று முறையிடஅம்முறையிடுதலைக்கேட்ட நியாயா
திபதிகள்வஞ்சகனானஏழைப்பிராமணனைப்பிடித்துவரச்சொல்லி விசா
ரிக்க அவன் அந்தநியாயாதிபதிகளைப்பார்த்து இவர்கள்யாத்திரைபோகிற
போது விற்றுவிட்டுப்போனார்களன்றிஎன்னைக்குடிவைத்துப் போகவில்
லையென்றுபொய்ச்சாதனமொன்றெடுத்துக்காட்ட அதுகண்ட நியாயா
திபதிகள் இதைச்சாட்சிமூலமாகவேயறியவேண்டுமென்று அடுத்தவீட்
டிலுள்ளவர்களையழைப்பித்து நீங்களிந்தச்சேதி யறிவீர்களாவென்று
கேட்க அவர்கள்நியாயாதிபதிகளைப்பார்த்துஇவனைக்குடிவைத்துப்போ
னதேயல்லாமல் வீடுவாசல்களை விற்றுப்போகவில்லையென்று சொன்னா
ர்கள் - அதுகேட்ட நியாயாதிபதிகள் அந்தக்கபடப்பிராமணனைப் பிடித்
துக்காவலிற்பண்ணி நீதிரோகமாய் ஒருவன்சொத்துகளை யபகரிக்கும்ப
டி பொய்ச்சாதனமேற்படுத்தினபடியால் உனக்குமிந்தஅபராதம் விதி
க்கப்பட்டது இந்தஅபராதம்விதித்தமுதற்பொருள்சேருமளவும் நீகார
கிரகமாகியகாவலிலிருந் துழியஞ் செய்யவேண்டும்நீ அவன் சொத்துக
ளெல்லாமபகரித்துக் கொண்டபடியால் உன்சொத்துக ளெல்லாம் ஏலம்
போடுவித்து வட்டிக்காகச்சேர்க்கப்படுமென்று நியாயந்தீர்த்தார்கள் அ
துபோலத்தேகாதிப்பிரபஞ்ச விவகாரத்தில் ஒருவனுக்கு யானெனதெ

நிருவாணப்பிரகரணம்.

விடை, பிரத்தியட்சம் அநுமானம் உவமானம் ஆகமம் அருத்தாபத்தி ஐதிகம் சம்பவம் என்றெட்டுவிதமுண்டு.

வி௲. அவற்றுள் பிரத்தியட்சப்பிரமாணமேதென்னில்,

விடை, பிரத்தியட்சத்தில் சந்தேகப்பிரத்தியட்சம் விபரீதப்பிரத்தியட்சம் யதார்த்தப்பிரத்தியட்சமென்று மூன்றுவிதமாயிருக்கும். அவற்றில் கட்டையைக்கண்டு கட்டையோ கள்ளனோவென்று சங்கற்பித்தது சந்தேகப்பிரத்தியட்சம். கள்ளனென்றே விகற்பித்தது விபரீதப்பிரத்தியட்சம். கட்டையென்றறிந்தது யதார்த்தப்பிரத்தியட்சமென்று சொல்லப்படும்.

வி௲, இவற்றிற்சொரூபவபிப்பிராயமேதென்னில்.

விடை, யதார்த்தப்பிரத்தியட்சத்திற்கொருபிரமாணமும் வேண்டுவதின்று சந்தேகவிபரீதபுத்திநிவிர்த்திக்கேப்பிரமாணங்கள் வேண்டுவன. பிரஞ்ஞானம்பிரமமென்று இருக்குவேத மகாவாக்கியத்தையால் ஆசிரியர் உபதேசிக்கச் சீடனும் அறிவே பிரத்தியட்சத்திற் பிரகாசிக்குமாகையால் தேகாதிசெகத்தெல்லாம் பிரத்தியட்சத்திற் காணப்படுகின்றதாகையால் நான்தேகமோ அறிவோ என்றதே சந்தேகப்பிரத்தியட்சம். நான்தேகமென்றறிகொண்டதே விபரீதப்பிரத்தியட்சம். நான்பிரமமென்று நிச்சயித்ததே யதார்த்தப்பிரத்தியட்சம். இவ்யதார்த்தப் பிரத்தியட்சத்திற்கு வேறுபிரமாணங்கள் வேண்டுவதின்று சந்தேக விபரீதபுத்தி நிவிர்த்திக்கே அநுமானப்பிரமாணமும் விசாரிக்கவேண்டும்.

வி௲, அநுமானப்பிரமாணமாவதேதென்னில்,

விடை, அநுமானத்தில் பிரதிக்ஞை ஏது திருஷ்டாந்தமென மூன்றுவிதமுண்டு. அவற்றில் பர்வதங்களிலக்கினியுண்டென்பதுவே பிரதிக்ஞை, தூமமுள்ளதுகாரணமென்பதே ஏது, மகானசத்திலக்கினியுண்டென்பதுவே திருஷ்டாந்தமாம்,

வி௲, இவற்றுள் பிரதிக்ஞையிற்சொரூபவபிப்பிராயமேதெனில்,

விடை, பூதங்களான தநுத்துயவுதிகசராசரமானவோர் தேகத்தைக்கு

திருவாவைப்பிரகரணம்.

றிந்தார் இவ்வுடம்பின்கண்ணறிவாகிய பிரமமிருக்குமென்றறிச்சு
யிப்படிப்பயிப்பறிக்கிலை,

வினா, ஏதுவிற்சொரூபவபிப்பிராயமேதென்னில்,

விடை, தேகேந்திரியாதிகளிலறிவுநின்று பகுத்தறிகின்றது தேகேந்திரி
யாதிகள் சடமாகையால் அறியச்சத்தியில்லை தேகேந்திரி யாதிக
ளே யறிவதானால்சுழுத்திமூர்ச்சைசமாதியிலிடத்துமறியவேண்டுமே அங்
ஙனமறியாமையினால் இந்திரியங்களிற் பகுத்தறிவிருப்பதுகொண்டு இவ்
வறிவுக்காதாரமானபிரமமொன்றிருக்குமென்பதே ஏது.

வினா, திருஷ்டாந்தத்திற்சொரூபவபிப்பிராயமேதென்னில்,

விடை, பிரத்தியட்சத்திலெழும்பின புகையைக்கண்டு அப்பிரத்தியட்ச
மான அக்கினியிருக்குமென்றறிந்ததுபோல தேகேந்திரியாதிக
ளினின்றறியுமறிவைப்பிரத்தியட்சத்திற்கண்டு யாவராலுமறியப் படாத
தாய் அவாங்மனாதீதமானபிரமமொன்றிருக்கிறதென்றறிவதே மூக்கியப்
பிரயோசனமென்றுசொல்லப்படும்- பூதபவுதிகசராசரங்களிலும்அறிவா
கியபிரமமிருக்கிறதென்றனுமானத்திற்காணப்பட்டதன்றிப்பிரத்தியட்
சத்திற் காணப்படவில்லை - அஃதென்ன லட்சணமுடையதாயிருக்கு
மோவென்றபுத்திவிருத்திபரிகரிக்கவேண்டி உவமானப்பிரமாணமும்வி
சாரிக்கவேண்டும்.

வினா, உவமானப்பிரமாணமாவதேதென்னில்,

விடை, மனாமிருகமென்றொன்றுண்டென்றுகேள்விப்பட்டவன் அதைத்
அறியவேண்டியஆவலினாலறிந்தபேர்களைவினவ அவர்களுமேக
தேசதிருஷ்டாந்தமாய் இந்தப்பசுப்போலிருக்குமென்பது உ
வமானப்பிரமாணம்,

வினா, இதிற்சொரூபவபிப்பிராயமேதென்னில்,

விடை, பிரமத்தையறியவிருப்பினவன்பிரம சொரூபமெப்படியிருக்கு
மென்று பெரியோர்களைவணங்கிக்கேட்கஅவர்கள்அதற்கோருவ

மே, லிங்கலேபனமில்லாதவர்களுக்குஞ்சீவனிருக்கிறபடியால் அந்தச்சீவன்போகிக்கவேண்டும். அப்படிகாணாமையால்போகிப்பது உபஸ்தேந்திரியமே—பலங்குறைந்து குகஞ்சுருங்கலானவர்களுக்குஞ் சீவனிருக்கிறபடியினால் அந்தச்சீவன்மலவிசர்க்கஞ் செய்யவேண்டும் அப்படிகாணாமையால் மலவிசர்க்கஞ்செய்வதுபாயுரிந்திரியமே—இப்படியிருக்கஇந்தக்கன்மேந்திரியவறிவுகளையெல்லாந்தன்னதாக்கொண்ட ஆவரணம்விடுபட்டு இவைகளாலார்ச்சிக்கப்பட்டபுண்ணியபாவங்களெல்லாந் தனக்கில்லையென்றுஞானதிருஷ்டியாற்கண்டு அசங்கனாகிய கூடஸ்தசொரூபமே தானென்பது விசாரித்தறியவேண்டும்—இந்தப்படியே பஞ்சகோசங்களையுஞ் சீவன்தானென்று ஆரோபிதமாய்க் கொண்டதல்லாமல் சீவனுக்கில்லை.

வினா. அதெப்படியென்னில்,

விடை. பருத்தேனிளைத்தேனென்பது ஆறுதத்துவமான அன்னமயகோசதாதாத்மியமன்றிச் சீவனுக்கில்லை-உசுவாசித்தேன் நிசுவாசித்தேனென்பதுபிராணமயகோசதாதாத்மியமன்றிச்சீவனுக்கில்லை - சங்கற்பித்தேன்விகற்பித்தேனென்பதுமனோமயகோச தாதாத்மியமன்றிச்சீவனுக்கில்லை - நான்கர்த்தாபோக்தாவென்பது விஞ்ஞானமயகோசதாதாத்மியமன்றிச்சீவனுக்கில்லை - நான் அஞ்ஞானிமூடனென்பதுஆனந்தமயகோசதாதாத்மியமன்றிச்சீவனுக்கில்லை,

வினா. அதெப்படியென்னில்,

விடை. என்சரீரமென்னும்போது தான்வேறுசரீரம்வேறென்றும் என் இந்திரியமென்னும்போதுதான்வேறு இந்திரியம்வேறென்றும், என்பிராணனென்னும்போது தான்வேறு பிராணன்வேறென்றும் என்மனமென்னும்போது தான்வேறுமனம்வேறென்றும், என்புத்தியென்னும்போது தான்வேறுபுத்திவேறென்றும், என்சித்தமென்னும்போதுதான்வேறு சித்தம்வேறென்றும், என் அகங்காரமென்னும்போது தான்வேறு அகங்காரம்வேறென்றும், என் அஞ்ஞானமென்னும்போதுதான்வே

று அஞ்ஞானம்வேறென்றும், வருகிற அனுபவத்தினால் தனக்கன்னியமாக
க்கண்டுசாட்சியாகிய தன்னிடத்தில் ஆரோபிதமாய் விகாரதசையில்மா
த்திரமிருக்கிறதென்று விசாரித்தறியவேண்டும்.

வினா, இப்படியறிந்தவர்களுக்கு ஆரோபிதமில்லையோவெனில்,

விடை. இப்படிசாட்சிமாத்திரமாயிருப்பவர்களுக்குச் சத்தமறிவதாகிய சுரோத்திரமும், பரிசமறிவதாகியதொக்கும் ரூபமறிவதாகியசட்சுவும், ரசமறிவதாகியசிங்குவையும் கந்தமறிவதாகிய கிராணமும், வசனிப்பதாகியவாக்கும், ஏற்றலிடுதலாகியபாணியும், கமனம்பண்ணுவதாகிய பாதமும், ஆனந்திப்பதாகியவுபஸ்தமும், மலவிசர்க்கம் பண்ணுவதாகியபாயுரும், உச்வாசநிச்வாசம்பண்ணுவதாகியபிராணாதிவாய்வுகளும், சங்கல்பவிகல்பஞ்செய்வதாகியமனமும், நிச்சயிப்பதாகியபுத்தியும், அஞ்ஞானமாகிய அவித்தையும்பின்னமின்றி யபின்னமானஅறிவுசொரூபமாய்க்கண்டிருப்பதால் விசாரித்தறிந்தவர்களுக்காரோபிதமேயில்லை இப்படிஒருவிகாரமின்றிநிருவிகாரமாயிருக்க அவாந்தரகற்பனையான மனமயக்கத்தினாற்ஜெனனமரணங்களுமுண்டானதுபோற்றோற்றியது.

வினா, அப்படியானால் ஜெனனமரண நரகசொர்க்கங்களனுபவித்ததாரென்னில்,

விடை, கன்மகாண்டத்தில் விதியாகச்சொன்ன புண்ணிய கன்மங்களைத் தேகேந்திரியங்களாற்செய்து அதற்குத்தக்கதேவபோகங்களையுந்தேகேந்திரியங்களேயனுபவித்தது - நிஷேதமாகச்சொன்னபாவகன்மங்களைத்தேகேந்திரியங்களாற்செய்து அதற்குத் தக்கதிரியக்காதிஸ்தாவரசரீரங்களெடுத்து துக்கரூபமான நரகங்களையுந் தேகேந்திரியாதிகளேயனுபவித்தது - இந்தத்தேகேந்திரியாதிகளேதானென்றும் இதுகளாலார்ச்சிக்கப்படும் புண்ணியபாபகன்மங்களைத் தன்னதென்றும் அத்தியாசமாகக்கொண்டவபிமானதோஷத்தினால் அளவிறந்தஜெனனமரணங்களுண்டாயிற்று - தீர்க்கமாய்விசாரித்தறியுமிடத்தில் சகலமும் இந்தத்தேகேந்திரியாதிகளுக்கேயல்லாமல் ஏகமாய்நித்தியமா யிருக்கப்பட்டதானு

கியகூடஸ்தருக்கில்லையென்றறிவதே வேதாந்தசித்தாந்தம், இதற்குதார
ணம் வாசிட்டம்.

தெரித்தறியும்பொருளேக்கச்சிவமறிவதுவாகச் செப்பலாகும்
விரித்தபுலனனுபவித்துமனுபவியாமனமதுவாய்விளம்பலாகும் புரிந்து
வுணர்வொளிநெஞ்ச மூலமிவற்றினறிவது வாய்ப்புகலலாகும் - பரிந்த
தொழில்செய்யினுங்கற்போலிருக்கு நிலையதுவாய்ப் பகரலாகும்-என்று
ம் * முடிவுநனவஞ்ஞானமில்லா நீடுயிலதுவாமும்மையாகி - யடர்தரு
ஞாதுருஞானஞேயமெழுந்தொடுங்குமிட மதுவேயாகுந்-இடவிசும்பனை
ருயிருந்தும் விசும்பாணிலையதுவாஞ்சித்தம்புந்தி - படர்மனம்போய்த்
தாயாவுள்ளறிவுபெறுசொலாப்பரமப்பாமருமம்-என்றும்-உபநிடதம்,

தோற்றுமசத்தறிந்தகலத்தொடர்பகலுமே தெளிவித்துலகே
மாற்றுதொழுந்தொழிலகலுமிந்திரியச் செயலகன்றால் வையநீங்கு—மே
ற்றுமனோலயத்திலறுமவிடய மவித்தைதனைநீங்கிவிடாவுநீங்கும் - மேற்
றுமிந்தச்சீவவறிவிழந்தவிடம்புகல்பரிபூரணமதாமே * மெய்மொழி *
ஓசைகேட்டிடுஞ்செவியறுசுவையுமூணுண் நாவுடலமூறறிய—வாசமூக்
குயிர்ப்பவுருவுகண்காண மற்றுமெக்கருமமுஞ் செய்க—வாசடைப்புல
ன்களனுபவித்திடினுமப்பின் மூழ்கிடினுமம்புயத்தின்—பாசடைநீரிற்
பற்றிலாததுபோற்பற்றிலார்பரமயோகிகளே * பூரணப்பிரகாசம் * உ
டம்புடனிருந்தேயுடம்பிலாவுண்மையுணர்ந்தவனுளத்தொருக்காலும்—
விடம்படுகாமம்வெகுளிமேவாதுவிளம்பிடும்பொருளெலாம்விளக்குமி
டம்படுமிதயாகாசமற்றிதுவே யிறப்பொடுபிறப்பிலாதென்றுந் — இடம்
படும்பிரமமாவது மாண்பாவாவதுந்தேகிகட்கெல்லாம் * சிவஞானசித்தி
யார் * சாக்கிரத்திலதீதத்தைப் பொருந்திடின்மற்றவரோ சகல சங்கமுட
னிருந்துஞ் சங்கமில்லாதவர்தம்—பாக்கியத்தை யின்னதெனப் பகர்வது
வென்னுயிரின் பற்றறுத்திட்டிடம்மையிலே பற்றற்றிங்கிருப்பா—ராக்கை
முடிகவித்துக்கொண்டரிவையர்களுடனேயனுபவித்தங்கிருந்திடினுமக
ப்பற்றற்றிருப்பர், நோக்கியிதுபுரியாதோர் புறப்பற்றுளுண்ணுழைவர்

பிறப்பினில்வினைகளுங்கிடாவே * என்றும்—மன்னவன்றன் மகன்வேட்
ரிடத்தே தங்கிவளர்ந்தவனையறியாதுமயங்கிநிற்ப—பின்னவனுமென்மக
னீயென்றவரிற்பிரித்துப்பெருமையொடுதானாக்கிப்பேணுமாபோல்—
றுன்னியவைம்புலவேடர்சுழலிற்பட்டுத்துணைவனையுமறியாதுதுயருழந்
தொல்லுயிரை—மன்னுமருட்குருவாகிவந்தவரினீக்கி மலமகற்றித்தானா
க்கிமலரடிக்கீழ்வைப்பான்-என்றும்—சொரூபசாரம்- நனவிற்றசேந்தி
ரியநாட்டியங்கள்பார்ப்போம்- கனவின்மனக்கூத்தைக்காண்போ நனவி
ற்-சுழுத்தியிலேயில்லாதஞானியக்கூத்தாடி - விழுப்பொருளாய் நாமிருப்
போமே-என்றும்-தத்துவராயர்-ஞானவினோதன் கலம்பகம்-அலராயினு
செய்யுமைம்புலன்காளெம்மறுபகையாங் - கலகாள்பலகுணங்காண்மலங்
காள்கரணங்களென்னும் - பலகாளருட்சொரூபானந்தனார் பவளத்திரு
வாய் - மலராதளவுமன்றேயுங்களோ டெங்கள்வாழ்வுகளே—என்றும்-
போதாத்தசாரம்- கற்பிதப்பொருள்கடம்மைக் கடவுளாய்க்கருதித்தொ
ல்லை - யுற்பவந்தன்னினின்றே யுழைத்தனனெண்ணில்காலந் - தற்பரம்
பொருளாய்வந்தஎம்பிரான்றடொழாதே - புற்புதக்கனவிற் பொன்னாற்
பூண்செயக்கருதினேனே—என்றும்-அவிரோதவுந்தியார் - அசுணாநிக்
கோரொன்றாலைம்புலனாலு-மிசையுமேற்கேடெமக்குந்தீபற - வெங்ஙன
மெய்துமென்றுந்தீபற-என்றும், தத்துவராயர்அமிர்தசாரம்-சிந்தாகுல
மனிதர் சிசிசெவிழுதலா - வைமந்தானுமீட்டுயவல்லாரோவைத்திலொரு-
வேட்கையுகணயிடம்விட்டின்றீன்வன்டிவைகள்- கேட்கைகூடாவோவொ
ன்றின்கேடு—என்றும்-திருவாய்மொழி - ஆவிதிகைக்கவைவர் குமைக்கு
ஞ்சிற்றின்பப்-பாவியேனைப்பலநீகாட்டிப்படுப்பாயோ - தாவியவையங்
கொண்ட தடந்தாமரைகட்கே-கூவிக்கொள்ளுங்கால மின்னங்குறுகாதோ-
என்றும்திருவாசகம் * அடற்கரிபோலைம்புலன்களுக்கஞ்சியழிந்த வென்
னை * விடற்கரியாய் விட்டிடுதிகண்டாய் விழுத்தொண்டர்க் கல்லாற் *
றொடற்கரியாய் சுடர்மாமணியேசுடுதீச்சுழலக் * கடற்கரிதாயெழுநஞ்

கிபகூடஸ்தருக்கில்லையென்றறிவதே வேதாந்தசித்தாந்தம், இதற்குகாரணம் வாசிட்டம்.

தெரித்தறியும்பொருளுக்கச்சிவவறிவதுவாகச் செப்பலாகும் விரித்தபுலனனுபவித்துமனுபவியாமனமதுவாய்விளம்பலாகும் புரிந்தவுணர்வொளிரெஞ்ச மூலமிவற்றினறிவது வாய்ப்புகலலாகும் - பரிந்துமதொழில்செய்யினுங்கற்போலிருக்கு நிலையதுவாய்ப் பகரலாகும்-என்றும் * முடிவுகாணவஞ்ஞானமில்லா நீடுயிலதுவாமும்மையாகி - யடர்தருஞாதுருஞானஞேயமெழுந்தொடுங்குமிட மதுவேயாகுந்-திடவிசும்பனீருயிருந்தும் விசும்பான்நிலையதுவாஞ்சித்தம்புந்தி - படர்மனப்போய்த்தாபரவுள்ளறிவுபெறி லொப்பாமப்பாமருமம்-என்றும்-உபநிடதம்,

தோற்றுமசத்தறிந்தகலத்தொடர்பகலுமே தெளிவித்தூலதேகமாற்றுதொழுந்தொழிலகலுமிந்திரியச் செயலகன்றுவ்வையநீங்கு—மேற்றுமனோலயத்திலறுமவிடய மவித்தைதனைநீங்கிவிடாவுநீங்கும் - போற்றுமிந்தச்சிவவறிவிழந்தவிடம்புகல்பரிபூரணமதாமே * மெய்மொழி * ஓசைகேட்டிடுஞ்செவியறுசுவையு முண்ணுநாவுடல மூறறிக—வாசமூக்குயிர்ப்பவுருவுகண்காண மற்றுமெக்கருமமுஞ் செய்க—வாசைப்புலன்களனுபவித்திடினுமப்பின் மூழ்கிடினுமம்புயத்தின்—பாசடைநீரிற்பற்றிலாததும்போற்பற்றிலார்பரமயோகிகளே * பூரணப்பிரகாசம் * உடம்புடனிருந்தேயுடம்பிலாவுண்மையுணர்ந்தவனுளத்தொருக்காலுந்—விடம்படுகாமம்வெகுளிமேயவாதுவிளம்பிடும்பொருளெலாம்விளைக்குமிடம்படுமிதயாகாசமற்றிதுவே யிறப்பொடுபிறப்பிலாதென்றுந்— திடம்படும்பிரமமாவது மாண்பாவவாதுந்தேகிகட்கெல்லாம் * சிவஞானசித்தியார் * சாக்கிரத்திலதீதத்தைப் பொருந்திடின்மற்றவரோ சகல சங்கமுடனிருந்துஞ் சங்கமிலாதவர்தம்—பாக்கியத்தை யின்னதெனப் பகர்வதுவென்னுயிரின் பற்றறுத்திட்டிடும்மையிலே பற்றற்றிங்கிருப்பா—ராக்கைமூடிகவிந்துக்கொண்டரிவையர்களுடனேயனுபவித்துக்கிருந்திடினுமகட்பற்றற்றிருப்பர், நோக்கியிதுபுரியாதோர் புறப்பற்றுளுண ணுமைவர்

பிறப்பினில்வினைகளுறுங்கிடாவே * என்றும்—மன்னவன்றன் மகன்வேட
ரிடத்தே தங்கிவளர்ந்தவனையறியாது மயங்கிநிற்ப—பின்னவனுமென்மக
னீயென்றவரிற்பிரித்துப்பெருமையொடுதானாக்கிப்பேணுமாபோல்—
றுவைப்புலவேடர்சுழலிற்பட்டுத்துணைவனையுமறியாது துயருறுந்
தொல்லுயிரை—மன்னுமருட்குருவாகிவந்தவரினீக்கி மலமகற்றித்தானா
க்கிமலரடிக்கீழ்வைப்பான்-என்றும்—சொரூபசாரம்- நனவிற்றசேந்தி
ரியநாட்டியங்கள்பார்ப்போம்- கனவின்மனக்கூத்தைக்காண்போம் நனவி
ற்-சுழுத்தியிலேயில்லாதசூனியக்கூத்தாடி- விழுப்பொருளாய் நாமிருப்
போமே-என்றும்-தத்துவராயர்-ஞானவினோதன் கலம்பகம்-அலராயின
செய்யுமைம்புலன்காளெம்மருபகையாங் * கலகர்பலகுணங்காண்மலங்
காள்கரணங்களென்னும் - பலகாளருட்சொரூபானந்தனார் பவளத்திரு
வாய் - மலராதளவுமன்றேவுங்களோ டெங்கள்வாழ்வுகளே—என்றும்-
போதசாரம்- கற்பிதப்பொருள்கடம்மைக் கடவுளாய்க்கருதித்தொ
லைவ - யுற்பவந்தன்னினின்றே யுழைத்தனனெண்ணில்காலம் - தற்பரம்
பொருளாய்வந்ததம்பிரான்றடொழாதே - புற்புதக்கனவிற்பொன்னாத்
புன்செயக்கருதினேனே—என்றும்-அவிரோதவுந்தியார் - அசுணநீக்
கோளொன்றாலைம்புலனும்- மிசையுமேற்கேடெமக்குந்தீபற - வெங்ஙன
மெய்துமென்றுந்தீபற-என்றும், தத்துவராயர்அமிர்தசாரம்-சிந்தாகுல
மனிதர் சீசீசெவிழுதலா - மைந்தானுமீடழியவல்லாரோவைத்திலொரு-
வேட்கையசுணமிடம்விட்டின்றின்வண்டுவைகள்- கேட்கைநதலோவொ
ன்றின்கேடு—என்றும்-திருவாய்மொழி - ஆவிதிகைக்கைவர் குமைக்கு
ஞ்சிற்றின்பப்-பாவியேனைப்பலநீகாட்டிப்படுப்பாயோ - தாவியவையுந்
கொண்ட தடந்தாமரைகட்கே-கூவிக்கொள்ளுங்கால மின்னங்குறுகாதோ-
என்றுந்திருவாசகம் * அடற்கரிபோலைம்புலன்களுக்கஞ்சியழிந்த வென்
னை * விடற்கரியாய் விட்டிடுதிகண்டாய் விழுத்தொண்டர்க் கல்லாற் *
றொடற்கரியாய் சுடர்மாமணியேசுடுதீச்சுழலக் * கடற்கரிதாயெழுநஞ்

சமுதாக்குங்கறைக் கண்டனே—என்றும் * கந்தரனுபூதி-கைவாய்கதிர்
வேன்முருகன்கழல்பெற் - றுய்வாய்மனனேயொழிவாயொழிவாய்மெய்
வாய்விழிநாசியொடுஞ்செவியா - மைவாய்வழி செல்லுமவாவினையே-என்
றும்-நாலடியார்-மெய் வாய்கண் மூக்குச் செவியெனப்பேர் பெற்ற-வை
வாயவேட்கையவாவினைக்-கைவாய் - கலங்காமற்காத்துய்க்குமாற்றலுடை
யார்-விலங்காதுவீடுபெறும்-என்றும் சிவஞானசித்தியார்-ஒருபுலனுகரு
ம்போதங்கொண்டிலேயொன்றின்பாலும் - வருபயன்மாறிமாறிவருந்திடு
மெல்லாமாய-மொருபொழுதுணரினுண்டாயில்ல இவ்வல்லல்வாழ்க்கை-
மருள்கனவதுவும்போலமாயும் பின்மாயமென்றே—என்றும்-தேவாரம்-
வென்றிலேன்புலன்களைந்தும்வென்றவர்விளாகந்தன்னுட்-சென்றிலே
தலாலேசெந்நெறியதற்குஞ்செய்யே - னின்றுளே துளும்புகின்றேனீச
னைநீசனேனோ-வின்றுளேனாயில்லைனைசெய்வான் சென்றினே
னே—என்றும்-படுகுழிபவ்வத்தன்னபண்டியைப்பெய்தவாற்றாற்கெடுவ
திம்மாயவாழ்க்கைகாண்டொறுங்கேதுகின்றேன் - முடுகுவரிதனுளைவர்
மூர்க்கரேயவர்களோடு - மடியனேன்வாழமாட்டே னாரூர்மூலட்டனே-
என்றும்-புள்ளுவரைவர்கள்வர்புனத்திடைப்புகுந்துநின்று-துள்ளுவர் சூ
றைகொள்வர்தூநெறிவிளையவொட்டார் - முள்ளுடையிவர்கடம்மைமு
க்கணன்பாதநீழ-லுள்ளிடைமறைந்துநின்றங்குணர்விறேலுய்தலாமே-
என்றும்-பொய்யனைத்தையும்விட்டவர்புந்தியுள்-மெய்யெனச் சுடர்வெ
ண்மழுவேந்திய-கையனைக்கச்சியேகம்பமேவிய - வையனைத்தொழுவார்
க்கில்லையல்லலே—என்றும் - மூக்குவாய்செவிகண்ணுடலாகிவந்-தாக்கு
மைவர்தம்மாற்பையவிழ்ந்த-நோக்குவானமை நோய்வினைவாரமேகாக்
குநாயகன்கச்சியேகம்பனே—என்றும்-திருவாசகம்-மாறுபட்டஞ்சென்
னைவஞ்சிப்பயானுன்மணிமலர்த்தாள்-வேறுபட்டேனை விடுதிகண்டாய்வி
னையேன்மனத்தே-யூறுபட்டேமன்னுமுத்தரகோசமங்கைக்கரசே- நீறு
பட்டேயொளிகாட்டும் பொன்மேனிநெடுந்தகையே—என்றும்-இந்திரி
யவயமயங்கியிறப்பதற்கேகாரணமா-யந்தரமேதிரிந்துபோ யருநரகில்

வீழ்வேற்குச் - சிந்தனையைத் தெளிவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
வந்தமிலாவானந்தமணிகொடில்லை கண்டேனே — என்றும் - பரிபூரணப்பி
ரகாசம் - பந்தப்புரங்களொருமூன்றும் பரமனிடையேயிருப்பதெனிற் -
றெந்தப்புருஷனொருக்காலு நசிபாசதமுற்றுஞ்சா - னந்தப்பரமனே
யவன்றனறியாமையினாலப்பரனைப் - பந்தப்படுமோர் சீவனெனப்பார்
ப்பான் பவத்தேபதைக்கின்றான் — என்றும் - சொரூபசாரம் - கண்ணாற்
கண்டதுண்டோகாதலாற்கேட்டதுண்டோ - விண்ணலாலேதும்விளைந்த
துண்டோ - வெண்ணுங்காற் - கானலாறோடிவரக்கண்டது போற்றோற்று
கிறுந் - தானலாதுண்டோசகம் — என்றும் - போகம்புவனம்பொருந்து
மிடமெங்குந் - தேகங்கரணந்திரியுமேயாகிலது - தன்னை நீயென்றுதயங்
காதே நெஞ்சமே - நின்னைநீ கண்டறிந்துநில் — என்றும் - திருமந்திரம் -
சீவனென்றுஞ்சிவனென்றும்வேறில்லை - சீவனார்சிவனாரையறிகிலார் - சீவனார்
சிவனாரையறிந்தபின் - சீவனார்சிவனாகியிருப்பரே - என்றும் - கடையவொழி
ந்திட்டிருந்தகனன்மரமடையவிழுங்கியதுவானவாறுபோ - லுடலிலொ
ழிந்திட்டிருந்தசிவமுயிரடைய விழுங்கியது வானவாறே - என்றும் - தன்
னையறியத்தனக்கொருகேடில்லை - தன்னையறியாமற்றானேகெடுகின்றார் -
தன்னையறியுமறிவையறிந்தபின் - றன்னைவிட்டென்னை யினிதுணர்ந்
தேனே - என்றும் - எல்லாமறிவதறிவுதனைவிட்டே - யெல்லாமறிந்துமி
லாபமிங்கொன்றில்லை - யெல்லாமறிந்தவறிவினையாவென்னி - லெல்லாம
றிந்தவிறையென்னலாமே - என்றும் - பொன்வண்ணத்தந்தாதி - ஒழித்தே
ன்பிறப்பினை யூர்ந்தேனறுவசையோங்கிற்றுள்ள - மிழித்தேனுடம்பினை
யேலென்பிறரிடையிம்மையும் - பழித்தேன் பழியேவிளைக்கும்பஞ்சேந்தி
யக் குஞ்சரமுந் - தெழித்தேன் சிவனடிசேர்ந்தேனினிமிகத் தெள்ளி
யனே - என்றும் - இருவம்மானை - மெய்யானதொன்றுமே மெய்ம்மைகாண
ம்மானை - மெய்யன்றிமற்றெல்லாமித்தைகாணம்மானை - என்றும் - கூறப்ப
ட்டிருக்கின்றது.

வினா, இன்னுமெப்படியென்னில்,

விடை. சச்சிதானந்தசொரூபமாகியும் அகண்டத்துவமாகியும் அபரிச்சி
ன்னத்துவமாகியும்சர்வவியாபகமாகியும்காலபரிச்சேத தேசபரி
ச்சேதவஸ்துபரிச்சேதாகிதமாகியும் நிராமயமாகியுமிருப்பதே ஆத்மசொ
ரூபமென்றுசுருதிஸ்மிருதிகளும் உபநிஷத்துமகாவாக்கியங்களும் குரு
வாக்கியமுங்கூறப்படுகின்றது.

வினா சத்தென்பதெப்படியென்னில்.

விடை, முற்பிறவிகளிற்செய்த நல்வினைதீவினைகளின்படி இந்தச்சரீரம்
வந்ததென்று சொல்லுகையாலும் இப்போது செய்கின்றவினை
களுக்கினிமேற்பிறவிவருமென்பது சர்வானுபவமாய்க்கண்டிருப்பதினு
லும் இப்படித்திரிகாலங்களிலுமுண்டான சரீரமாத்திரமழிந்து ஆன்மநித்
தியமாயழிவற்றிருப்பதினாலும் சத்தென்பதாயிற்று,

வினா, சித்தென்பதெப்படியென்னில்,

விடை, பாலியாவஸ்தைமுதல்நடந்துவரும்விவகாரங்களிற்சிறிதுமறதியி
ருந்தாலும் மற்றவிருத்தாந்தமெல்லாம் அமாவாசையிருளும்,
மேகாந்தகாரமும் மழைநிசியுங்கூடியகாலத்திலும் மூலைவீட்டில்மூக்கா
டிட்டுக்கண்களைமூடிக்கவிழ்ந்துபடுத்திருக்கிற புருஷனுக்கும் சூரியச
ந்திராக்கினியின்மினி நட்சத்திர நேத்திரசாதனங்களொன்றுமின்றியிரு
ந்தும் இன்னதின்னதென்று பகுத்தறியப் படுகிறதினால் சித்தென்பதா
யிற்று.

வினா. ஆனந்தமென்பதெப்படியென்னில்,

விடை, தனதானியதாரபுத்திரர்களால்வருஞ்சுகங்களைநெடுநாளாய் ஒரு
க்கால்போலப்பலகாலுமனுபவித்து அதுகளால் வருஞ்சுகமெல்
லாந் துக்கமாய்க்கைவிட்டுச்சுழுத்திசுகத்தையேசதாநாடுகிறபடியால் ஆ
னந்தமென்பதாயிற்று,

இதற்குதாரணம்கைவல்யநவநீதம்- சென்மாந்தரஞ்செய்தவினை
களுடனுருமெனிற்செல்லாவிவனுண்டலோ- சன்மானுபவநரகசொர்க்க

மெனில் வருகின்றகாலத்துமிவனுண்டலோ - வுன்மாதயர்தனுவுடல்கட
வுளுடன்மனுடவுடன் மாறிமாறியழியுந்—தன்மாயவுடல் கெடினுமிவ
னிருப்பதுகொண்டுசத்தென்பதொக்குமகனே - என்றும்-இருளாகமூடு
ஞ்சுழுத்தியிலிராத்திரியிலிரவிசுடரற்றபொழுது - மருளாமலிருளையும்
பொருளையுந்தெரிகின்றவகைகொண்டுசித்தாகுமே— பெருவாழ்வுமிக்கு
தாலே தன்னிடத்தினிற்பெயராதபிரியமதனு-லிருகாதபிரியஞ்சுகத்தில்வ
ருமாதலா லானந்தமாமைந்தனே—என்றும் - சத்தேசித்தாகுமயலெனி
லசத்தாமசத்தானுற் சாட்சியெங்கே - சித்தேசத்தாகு மயலெனிற் சட
மாஞ்சடங்களுக்குத் - திதியுமில்லை — யொத்தேதோன்றிய சத்துஞ்சி
த்துநல்லசுகமாகு மூகத்துக்கோர் — வித்தேயன்னியமாகிற்சடம சத்தா
ஞ்சுகானுபவம்விளைந்திடாதே—என்றும் - வியாதசத்துமூனம்விளங்கு
வதுதன்னலோவேறென்றலோ— வாயால்வேறெனிலதுவுமசத்தோசத்
தோவசத்தேல்மலடிமைந்தன்-பேயாகாரியஞ்செய்யுமோ வசத்தெனவிப்
படியனைதயும்பிரித்துச்சொன்னு—லோயாதவவத்தையாங்குதர்க்கவிதற்
டங்களைவிட்டொழிந்திடாயே - என்றுங்-கூறப்பட்டிருக்கின்றது-ஓர்கிர
கம் ஓர்சரீரங்களைக் குறித்து அதற்குள்ளிருப்பவன்போற் கண்டமாகியு
ம்பரிச்சின்னமாகியும் ஓர்தேகவியாபகமாத்திரமாகியுமிருப்பதால்.இனி
அகண்டமாகியும் அபரிச்சின்னமாகியும்சர்வத்தினுள்ளும் புறமும்வியா
பித்திருக்கும் சர்வவியாபகமாகியுமிருக்கின்றதலைவனுகியபிரமசொரூப
த்தையு மிந்தப்படியே விசாரித்தறியவேண்டியது,

வினு; அதெப்படியென்னில்,

விடை, அகண்டபரிபூரண வியாபகமாகியும் அபரிச்சின்னமாகியும்கால
தேசவஸ்துபரிச்சேதரகிதமாகியுமிருப்பதேபிரமசொரூபமெ
ன்றுசுருதிஸ்மிருதிகளிற்சொல்லுகின்றது.

வினா, ஆகாசத்திற்கும்இந்தக்குணங்களிருக்கிறபடியால் அதுவேபிரம மென்றுசொல்லலாமேயென்னில்,

விடை, ஆகாசமானது நான்குபூதங்களிலும் நிறைந்து சர்வவியாபகமாய் நிரவயமாயிருந்தாலும்சிருட்டிகாலத்துண்டாகிப் பிரளயகாலத் திலழிந்துபோவதினால் காலபரிச்சேதம்வரும்,

வினா, காலமேபிரமமென்றுசொல்லலாமேயென்னில்,

விடை, காலமானது ஏகவியாபகமாய் நிரவயவமாய்எந்ததேசத்திலும் வி யாபித்திருந்தாலும்தேசாசாரங்களால்காலக்கிரியைகளும் அதனு லுண்டாகும் பொருள்களுமாறியழிவுவருகிறபடியால் காலத்திற் குந்தேசபரிச்சேதம்வரும்,

வினா, தேசமேபிரமமென்றுசொல்லலாமேயென்னில்,

விடை, தேசமானது எங்கும்வியாபித்திருந்தாலும் ஒருதேசத்திலுள்ள வஸ்து ஒருதேசத்தி லில்லாமையினால்தேசத்திற்கு வஸ்துபரிச் சேதம்வரும்,

வினா வஸ்துவேபிரமமென்றுசொல்லலாமேயென்னில்,

விடை, வஸ்துவானது வியாபகமின்றிக்கண்டமாய்பரிச்சின்னமாய் அவி த்தியமாயிருப்பதினால் வஸ்துபரிச்சேதமும்வரும்ஆகையால்கா லத்தினால் ஆகாசத்திற்கும் தேசத்தினாற்காலத்திற்கும் வஸ்துவி னால்தேசத்திற்கும் அழிவுவருகிறபடியால்இவைகள் பிரமசொரூ பமாகமாட்டாது,

வினா, ஆனால்பிரமசொரூபமெவ்வகைப்பட்டதென்னில்,

விடை. தேகேந்திரியாதிகரணங்களும்அவற்றின் தொழில்களுமின்றிக்கா லதேசவஸ்துபரிச்சேதாகிதமாய்அகண்டபரிபூரணமாய் அபரி ச்சின்னமாய்சின்மாத்திரமாயிருக்கின்றஅறிவுவியாபகமேபிரம சொரூபம்,

வினா, பிரமத்திற்குத்திரிவிதபரிச்சேதமுமில்லையென்பதேதெனில்.

விடை, எந்தக்காலத்திலும் எந்தத்தேசத்திலும் எந்தவஸ்துவிலும் உள்ளும்புறனும் எள்ளிடைவிடமின்றிச் சர்வவியாபகமாய் அறிவறியாமையற்று ஜெகசித்திரபடம்போலும் பர்வதம்போலுமசைவற்று நிஸ்மரணமாயிருக்கிறபடியால் திரிவிதபரிச்சேதமுமில்லை என்பதே துணிவு-இதற்குதாரணம்-மெய்ம்மொழி. பொன்னைத்தான்கண்டபேர்கள் பணியெனப்புகலார்போல - மன்னித்தானுடன்மயக்கு மாயதத்துவங்களாய்த்தே-புன்மைத்தானறியவின்பவுருவு சைதன்யமாகுந்-தன்னைத்தான்கண்டவர்க்குத்தானெனவேறுமுண்டோ - என்றும்-மூலசித்தி-ஒன்றுமெக்காலமெங்குமியாருமிறைவனீயே-யின்றிமற்றொன்றுமின்றி யிருந்தவாதிருக்கலிங்கன் - பின்னைமற்றுளவாய்ப்பேணியிதமிகப்பெய்த்தோறிச்-சென்றிடச்செய்ததேயவ் விச்சையென்செட்பிடாயே - என்றும் - மகாவாக்கியம் - இக்குணங்களுடையபரப்பிரமமேநாமானோ மெவ்வாறென்னி-னெக்ககளுதியெனச்சனிப்புமரிப்பின்மையினுனித்யமானோந் தொக்குடம்புபோலமலத்தின்றுவக்கதின்மையினுற்சுத்தமானோ-மூட்டரணம்போனசிக்குமறிவுபெருமையிற்புத்தமுடைத்துநாமே - என்றும்-அகங்காரவிருத்தியெனப்பந்தமிலாமையின்முத்தமானோமிந்தச் — சகம்போலவிளைக்குமிந்திரசாலமிலாதிருக்கையினுற்சத்யமானோஞ் - சுகங்காணிற்றன்னையலாற்சுகமில்லையென்றேபரமானந்தமானோ- மிகுங்காலதேசவஸ்துவெனப்பிரியாவானந்தவேடநாமே - என்றும்-தத்துவப்பிரகாசம்- மூன்னைநற்கருதியோதிமுடிவுறற்கரியதாக - வின்னமத்தேவர்மூவரொய்துறற்கிடமாமேவத்-தன்னையிப்படியேகாணத்தானளித்தெனக்கோர்வார்த்தை சொன்னநற்சொரூபானந்த சோதியைத்தொழுதல்செய்வாம் - என்றுங் கூறப்பட்டிருப்பதால் இதுவேபிரமாணசித்தம்,

வினா, ஆத்மாவிகாரமின்றி நிர்விகாரியாயிருக்கத் தேகேந்திரியாதிகள் தொழிற்படுவதானால் அதுகளுமோர்வஸ்துவென்றுதுவிதவாதிகள் சங்கிப்பார்களேயென்னில்.

விடை, காந்தக்கல்லானது அசைவற்றிருக்க அச்சந்நிதானபலத்தினால்சடமானஊசிசேஷ்டித்து அக்காந்தத்தைப்பாய்ந்து பிடிப்பது

போலும் சூரியனிச்சையின்றியிருக்க அச்சந்நிதான பலத்தினால் சடமான சூரியகாந்தக்கல்லிலக்கினி ஜெனித்து அதனால் பாகாதிகிரியைகள் நடப்பதுபோலும் ஆத்மப்பிரகாசத்தினாற் பிரதிபலித்தசாயையானது விருத்திரூபமாய்ச் சாக்கிரசொப்பனங்களிலுள்ள விடயங்களை இந்திரியாதிவழிகளாலறிந்து விவகரிக்கின்றது சுழுத்திமூர்ச்சைசமாதிகளில் விருத்தியின்மையால் ஒரு அறிதலும் விவகாரங்களுமில்லை ஆத்மசந்நிதான பலத்தாற்றொழிற்பட்டதன்றியிந்திரியாதிகள் சடமேயாம்,

இதற்குதாரணம்-சிவஞானபோதம்-கடக்குஞ்சரம்பண்ணியுண்ணின்றொருத்தன்கைபாதகன்னங் கண்மெய்போலியக்கும் - கிடக்குநடத்தாவிடத்திவ்வுடம்புங்கிடக்கும்மொருத்தனடத்தாவிடத்தே * என்றும்-நிழற்பாவைகண்ணாடியிற்பாவைகைகா - விமிர்க்கும்மடக்குமிவன் செய்யுமெல்லாந் - தொழிற்பாலதாமிந்தவுடலுஞ்செய்தொழிலுஞ் - சுடர்ஞானவடிவானவன்செய்ததொழிலே * என்றும்-கைவல்யநவநீதம் - செய்கையுஞ்செய்விக்கையுமற்றிருக்குங்காந்தச்சிலைமலைமுன் னிரும்புகள்சேட்டிக்குமாபோற் - செய்கையுஞ்செய்விக்கையு மற்றிருக்குமென்முன்சடமானவுலகமெல்லாஞ் சேட்டைசெய்யு - மெய்கலந்தவிந்திரியவிகாரரூபவிவகாரவிருத்திகளும் விருத்திதானும் - மெய்கலந்தசமாதிக்குஞ் சாட்சியேதான்வெயில்போலென்றுரைத்தவனேவிபுமாகர்த்தன் * என்றுங்கூறியிருப்பதினால்இதுவேபிரமாணசித்தம்,

வினா, இந்திரியாதிகள் தொழிற்படாது சடமாயிருந்தாலுந் துவிதமேயன்றி அத்துவிதமல்லவென்றுசொல்லுவார்களெனனில்,

விடை, தொண்ணூற்றாறுதத்துவமென்பது சகலமதத்துக்கும்பொதுவென்றும்சைவர்களுக்கு (௩௰௬) வேதாந்திக்கு (௨௮) மாயாவாதிக்கு (௨௫) வயினவனுக்கு (௨௪) தத்துவங்களென்றும்பின்னும்பதினெழுதத்துவமென்றும்பத்தொன்பதுதத்துவமென்றுஞ்சொல்வதெல்லாம்சொன்மாத்திரமேயன்றிப்பஞ்சதன்மாத்திரையைத்தவிரக்காலத்திரயத்திலுமில்லை - எப்படியென்றால் சத்தமென்றறிகிறபோது சத்தமும்

சத்தமென்றறிந்தவறிவுமாத்திரமன்றிச் சமானவாய்வு சுரோத்திரேந்திரியமவாக்கிந்திரியம்வசனாதிவிடயங்களுமில்லை-பரிசமென்றறிகிறபோது பரிசமும்பரிசமென்றறிந்த வறிவுமாத்திரமன்றி மனம்வியானவாய்வு தொக்கிந்திரியம்பாணிந்திரியம்தானாதிவிடயங்களுமில்லை-ரூபமென்றறிகிறபோது ரூபமும்ரூபமென்றறிந்தவறிவுமாத்திரமன்றி புத்தி உதானவாய்வுநேத்திரேந்திரியம் பாதேந்திரியம்கமனாதிவிடயங்களுமில்லை - ரசமென்றறிகிறபோது ரசமும்ரசமென்றறிந்தவறிவுமாத்திரமன்றிச் சித்தம்அபானவாய்வுசிங்குவேந்திரியம் உபஸ்தேந்திரியம் ஆனந்தவிடயங்களுமில்லை-கந்தமென்றறிகிறபோது கந்தமும் கந்தமென்றறிந்த வறிவுமாத்திரமன்றி அகங்காரப்பிராணவாய்வு கிராணேந்திரியம் குதேந்திரியம்மலவிசர்க்காதிவிடயங்களுமில்லை இந்தப்படி தன்மாத்திரைகளைத்தவிர வேறேதத்துவங்களில்லாமையாலும் தன்மாத்திரைகளைப்பிரத்தியேகம் பிரத்தியேகமாய்ப்பிரித்துப்பார்க்க அதுகளுந்தனியே ஒன்றைவிட்டொன்றில்லாமையினாலும் ஐந்து மொன்றாகவேயிருப்பதினாலும் இதுகளுக்குக்காரணமானவிட்சேபசத்தியும்விவேகித்தவிடத்திலில்லாதிருப்பதினாலும் அந்தஆவரணமும்ஒன்றுந்தெரியவில்லை யென்றறிந்த வறிவுமாத்திரமாகி அறியேனென்றஅஞ்ஞானம்நசித்துவிட்டது பின்னுந்தனக்குள்ளேசகலதத்துவங்களுந்தோன்றி வளர்ந்து ஒடுங்குமதென்று கண்டவறிவேமகாகாரணமான மூலப்பிரகிருதி அதுவுஞ்சொன்மாத்திரமேயன்றி ஒருபொருளல்ல,

வினா. அதெப்படியென்னில்,

விடை, தன்னிடத்தொன்று உண்டானாலல்லவோ இருக்கவேண்டும் இருந்தாலல்லவோ லயிக்கவேண்டும் அப்படி உண்டாகவுமில்லை வளரவுமில்லை லயிக்கவுமில்லையென்றறிந்த வறிவுமாத்திரமா யிருப்பதேமூலப்பிரகிருதிரகிதமான பிரமசொரூபம்,

இதற்குதாரணம் - தத்துவராத்திருகாம் - தத்துவம்பலவெனச்சாற்றுவார்சிலர் — பித்தர்களெனுமிடம்பேசவேண்டுமோ = வத்துவின்வடி

வலதன்றிநிற்றயின் - னைத்தனைதத்துவயின்னையின்மை * என்றும்-இ
ந்தியயிருபதோ டிரண்டெனத் - தந்திரமோதுவர்சார்ந்தமேலவர் -
இந்தியம்பலவென விசைத்தபோலாம் - வந்ததுடலினமா மனோவிகா
ரமே * என்றும் - வேறு-கோடிதத்துவமென்னினுங்கோதிலா - நீடுதற்
பரநின்றதுமற்றவை -யோடசித்துசித்தாகிடுமுண்மையிற் - பேடுபப்பல
பேசல்பிதற்றலே * என்றும் - போதாமிர்தம் - பண்ணுவர்பலபலதத்து
வங்களை - மன்னிய பரமுணராதமாந்தர்க - டன்னிலே தனையுணர்கின்ற
போதினி - லன்னியமிது வெனவறையலாவதே * என்றும்—கோணுமா
த்திரைநாறுகுமிழிகொள்ளைநீர் - வேலையிற்பிறிதென விளம்பலாவதோ-
சாலுதத்துவம்பலசாற்றுமாயினும் - மூலநற்சிவமதேமுடிவினுள்ளதே *
என்றும்-சிவப்பிரகாசதரிசனம் - ஒன்றதென்றிடலாவதுமொன்றற-நின்
றதத்துவநின்மலபோதமே - பின்னையொன்றுளதென்றுபெருமயக்கு-
மென்றுவேதமியம்பிய தல்லவோ * என்றும்-முதுமொழி-தத்துவத்தை
யுணருந்தலைவரை - யொத்ததம்பிலொருவனென்றுள்குவார்-நித்தநிர்க்கு
ணநின்மலனென்றுளா-ரத்தருக்குமவர்நகைப்புறுவார் * என்றும்-சமயசூ
டாமணி-வடம்படக்கோத்தமணி நாலைநூல் போன்மன்னுயிராக்கைகட்
கெல்லா-மிடம்படக்கோத்து நின்றதங்கொண்டே யெனுமிடமேமறைகளீர்
பாரிற் - கடம்பலபேதப் பட்டபாத்திரமே கடத்தினுளாகாசப்போலு-
முடம்பினிலொளியைப்பார்த்தபோதெல்லாமொருவனேயன்றிவேறுளா
னோ * என்றும்-சொரூபசாரம்-பூதாதியைந்தும் பொறிபுலன்களெல்லா
ஞ்சித்-தேதாதியத்தமைவெல்லாஞ்சித்-தோதரிய-கற்பனையுஞ் சித்தொ
த்துங்காண்பானுங்காட்சியுஞ்சித் - தற்பரம்வேறில்லாமையால் * என்
றும்-பார்த்ததிசையெல்லாம் பரிபூரணசொரூபத் - தீர்த்தமெல்லாமான
த்தசித்சொரூபங்கீர்த்திக்குந்தோத்திரங்களெல்லாஞ் சசொரூபநம்மை
யால்-வேற்றுருவமேதாகுமே * சிற்சொரூபந்தானேசகசொரூபமா
னவெலாந் - தற்சொரூபசாரமாச் சாற்றலே-பொற்சொரூப-மச்சுருவ
ம்போலவுருவாய்த்தோற்றுமொரு-சொச்சொரூபந்தானேதுணை *
என்றும்-வாசிட்டம்-உவரிநீர்போலுலகெல்லா மொன்றெனவுணர்வுமாத்

திரமதுதானுற்றபுந்தி - கவர்வுறுதலாலசையுநிறையுநீர்தான்கல்லோலத்
தாலசையுங்கணக்கேபோலச் - இவ்வுணர்வுமாத்திரமேபிரமமாகி நிகழ்
பெயராய்ப்புகல்பொருளைச் செகமென்றெண்ணித் - தவமறுபேதையர்
காண்பாரறிவுதானே சற்றசைந்தமாத்திரத்திற்சருக்கமுண்டாம் * என்று
ம்-பெரும்பெரியவடிவான பிரமமேயாதலாற்பிறிதொன்றில்லை - வரும்
பொருளெல்லாம் பிறிவின்கணதையாயிருத்தலிலிவ்வையமெல்லாங் - கரு
ம்புயமேலயுறிவேயாங் கற்பனைவேறில்லையாற் காணப்பட்ட - வரும்பொ
ருள்கட்கிலறிவுண்டாதலினாலறிபொருளாமனைத்துமில்லை * என்றும்-அ
வதூதகீதை - சுலோகம் * சர்மம் சூன்யம் மனஸ்சூன்யம் சத்தா சத்யவி
தியந்த - சோபாவாபாவிதம் புரோக்தம் சாஸ்த்ரசம்மதி பூர்வகம்-என்
றுங்கூறப்படுகையாலிதுவே பிரமாணசித்தம்.

விறு. இப்படிதுவிதவஸ்துவின்றித்தானே தானாயிருக்கிறதன்னிடத்தி
ல்துவிதபாவனைகளான விபரீதங்களெப்படியுள்ளதாகத்தோற்றி
யுதென்னில்.

விடை. இல்லாதவஞ்ஞானத்தோற்றமானபுலன்வழிகளால்காலத்திரயத்தி
லுமில்லாதசுத்தமித்தையான விபரீதபாவனைகள் இல்லாதகானந்
சலம்போ லுள்ளதாகத்தோற்றியது.

விறு. உள்ளவஸ்துவிலுள்ளது தோற்றுமேயன்றி இல்லாது தோற்று
மேதென்னில்,

விடை. உள்ளஇரும்பில் இது ஆயுதமெனத்தோற்றியது இல்லதாவாயுத
ந்தோற்றுமா உள்ள இரும்புதானே தோற்றினது உள்ளபொன்
னில்இது ஆபரணமெனத்தோற்றியது இல்லாதவாபரணந்தோற்றுமா உ
ள்ளபொன்தானேதோற்றினது - உள்ளமண்ணில் இதுகடமெனத்தோற்
றியது இல்லாதகடந்தோற்றுமா உள்ளமண்தானேதோற்றினது - உள்ள
மரத்தில் இதுகரிபரிகளெனத்தோற்றியது இல்லாதகரிபரிகள்தோற்றுமா
உள்ளமரந்தானேதோற்றினது - உள்ளசமுத்திரத்தில் இது அலைநுரைகு
மிழியெனத்தோற்றியது இல்லாதஅலைநுரைகுமிழிதோற்றுமா உள்ளசமு

த்திரந்தானே தோற்றினது - உள்ள ஆகாசத்தில் இது நீலமெனத் தோற்றியது இல்லாத நீலாதி வர்ணங்கள் தோற்றுமா உள்ள ஆகாசமே தோற்றினது - உள்ள கட்டையில் இது கள்ளனெனத் தோற்றியது இல்லாத கள்ளன் தோற்றுவானா உள்ள கட்டையே தோற்றினது - உள்ள பழுதையில் இது பாம்பெனத் தோற்றியது இல்லாத பாம்பு தோற்றுமா உள்ள பழுதையே தோற்றினது இந்தத் திருஷ்டாந்தங்களைப் போல சச்சிதானந்த சொரூபமான தன்னிடத்தில் இது நாமரூபமெனத் தோற்றியது உள்ள சச்சிதானந்தமே தோற்றினதன்றிக் காலத்திரயத்திலு நாமரூபந் தோற்றவேயில்லை.

வினா, அதெப்படியென்னில்,

விடை, இருக்கின்றது சத்து அந்தச் சத்துதானே நாமரூபமான சித்தாய்த் தோற்றியது அந்தச் சித்தைவிட நாமரூபமென்பது காலத்திரயத்திலு மில்லாமையாலும் சத்தைவிடச் சித்தென்பது வேறேயில்லாமையாலும் இரண்டாம் வஸ்துவில்லை அந்தச் சத்துக்குஞ் சித்துக்கு மிடையேயுள்ள ஆனந்தமான சுகந் தோற்றமாட்டாது.

இதற்குதாரணம்-வாசிட்டம்-ஆகலினாலே தொன்றுஞ் செய்ததல்ல லடுத்துளவிச்சகமில்லை யறிவுமட்டு - மேதகுசங்கற்பமே வேதாவாகுமெய்யாகவறிவன்றி வேறொன்றில்லைச்-சேதனமாத்திரத்துதித்த சிருட்டியந்தச்சேதனமேவடிவென்று செப்பலாகு மோதியசெய்வோன் பொசிப்போனிரண்டுமல்ல வநுபவந்தீர் பிரமமேயுள்ள வெல்லாம் * என்றும் பொருகடலிற்றிரைமுதலாய்ப் பிறந்தவெல்லாம் புனலாகி விளங்காமற்புகுதியாமா—யொருபொருளாம் பிரமமாத்திரமே யல்லா லுபயமெனுங் கற்பனைப்பேரொன்றுமில்லை—யெரியிடத்திற் சூடுமாத்திரமேயல்லாலிரண்டுண்டோவவ்வகைபோலென்றுமொன்றுஞ்—சரியைகிரியா யோகஞானத்தின் முத்திசாதனங்கணிறைந்தவர்க்கே சாற்றல்வேண்டும் * என்றும்— அத்துவிதவுண்மை-தங்கமொன்றே பணிகளிற் சாற்றும்விதங்கள் வெவ்வேறு—தங்கவிலக்கணமு மன்று தங்கந் தவிர வேறன்று—தங்கமழியாப் பணியழியிற் சாற்றுமிந்தத் தகைமைபோ—லெங்குநிறை சச்சிதானந்தமி லங்குமிந்தவுலகமே * என்றும்— தங்கமொன்றே பணிகளிற்சாற்றும்

விதமாய்விளங்குமலி — னெங்குமுதலாஞ்சகங்களாயறிவே விளங்குமயலில்லை — இங்கங்கென்றே பங்கொன்றுமில்லை யகண்டவறிவொன்றே — துங்கவறிவுதோன்றளவுந்தோன்றுநானாவிதரூபம் * என்றும் - கைவல்ய நவநீதம் - கானனீர்கிளிஞ்சல்வெள்ளி கந்தர்ப்பநகர்களூர் — வானமை கயிற்றிற்பாம்பு மலடிசெய்மூயலின்கோடு — மேனமாந்தறியுமாணிற் பிரபஞ்சமெல்லாம்பொய்யே — ஞானமெய்மகவேயுன்னை நம்மானே மறந்திடாயே * என்றும் - பிரமாணங்களிருப்பதினால் காலத்திரயத்தி லும்மாயை தோற்றமாட்டாதென்பதே துணிவு.

வினா, மித்தையான நாமரூபங்கள் காலத்திரயத்திலுமில்லாத அகண்ட சச்சிதானந்தசொரூபமாத்திரமாயிருக்க இந்தச் சனனமரணமுதலான தாபத்திரயங்களும் சீவேசுரபேதங்களும் பந்தமோட்சங்களுமுள்ளதாகத் தோற்றிய தெப்படியென்னில்,

விடை, ஆத்மாவே தேகேந்திரியாதிகளென்றும் தேகேந்திரியாதிகளே ஆத்மாவென்றும் விவர்த்தமாகக்கண்டதேயஞ்ஞானம் அவ்வஞ்ஞானத்தினால் ஆத்மாவாகியதன்னை அசத்தாகிய நாமரூபங்களாய்க்கண்டபோதத்துவிதமறைந்து துவிதபாவந்தோன்றியது.

வினா. அதெப்படியென்னில்.

விடை. மேகமறைவாலோடச் சந்திரனோடுவதுபோலும் சலமசையநீர்ச்சலமான்சந்திரனசைவதுபோலும் ஓடமேறிப்போகிறவனுக்குக்கரையிலிடத் தசைவற்றிருக்குமரம் ஓடிவருதல்போலும்பித்தமேறிய கட்குடியினால் சுழலாதவீடுவாசல் சுழல்வதுபோலும் கொள்ளிக் கட்டை சுழற்றினால் சூரியவட்டமாய்த் தோற்றுவதுபோலும் காற்றாடி கயிறுயிருந்தும் சக்கரமாய்த்தோற்றுவதுபோலும் கானலாறுடச் சலமோடுவதுபோலும்-கண்ணாடியினது ரசாரோபத்தினால் சலமிருக்குமிடஞ்சலமின்மையாகவுஞ்சலமின்றியவிடஞ் சலமுள்ளதாகவுந்தோற்றுகிறதுபோலும் ரசக்கண்ணாடிக் கெதிரிருந்த வீடுவாசல்கள் பிற்புறந்தோற்றுவது போலும் அஞ்ஞானத்தினால்நாமரூபமான துவிதபாவந்தோற்றியது.

இதற்குதாரணம் - அபரோட்சாத்மானுபவ தீபிகை,

ஆன்மாவைத்தான்றேகமென்று மறிந்தார் பொன்னைப் பணியென்றூர்-மானநிசமுண்டாய்த்தானே மண்ணைக்கடமாய்நிச்சயித்தா — ராலதனூலைப்படமென்றேயற நிச்சயித்தாரதுபோலுமானமூடமதனாலே யான்மாத்தேகமெனவறிந்தார் * என்றும்—அறியுமணியை நெருப்பென்றுமறிந்தார்போல மூகிலோடச்—செறிசந்திரன்றானோடுதல்போற் செலமேயலைசயச்சந்திரன்று—னறியவசையுதென்றற்போ லஞ்ஞானத்தாலான்மாவைப்—பிறியாதேகமாயறிந்தார் பின்னமான வவித்தையினால் * என்றும்—அவித்தையினாலே யான்மா விடத்தினிற் றேகமென்று—நவிற்றியவத்தியாச நாமமுண்டாயிற்றென்றே—யவித்தைபோய் விவேகந்தன்னாலறியவே சீவான்மாவுந்—தவித்திடாப்பரமான்மாவு மயிக்கியந்தாவராங்கள் * என்றும் - கூறப்பட்டிருப்பதினாலும் இப்போதும் ஞானதிருஷ்டியாய்ப்பார்த்தவிடத்தில் பார்க்கிறவன் பார்க்கிறது பார்க்கும் பொருளாகியமூன்றும் பஞ்சப்புலன்களோடழிந்து ஆதித்தப்பிரகாசத்தினுள் தீபப்பிரகாசமடங்கினது போலும் சூரியப்பிரகாசத்தினுள் பூதவிருளடங்கினதுபோலும் அறிவாகிய பெருங்கண்ணைமறைத்த ஆணவப்படலம் நீங்கும் அப்போது நாமரூபாத்மகமான சகலதேகாதிப்பிரபஞ்சங்களுந் தனக்குள்ளொடுங்கித் தானேதானா யெதிர்த்து விளங்கும் இதற்குதாரணம். அபரோட்சாத்மானுபவதீபிகை - பார்க்கிறவன்பார்க்கிறது பார்க்கப்படுகிறது—மேற்குமிவைமூன்று மெவ்விடத்திலில்லையோ —மார்க்குமவிடத்தலிட்டிதான் பண்ணுவதீதார்க்குஞ்சமதிட்டியாம், என்றிருப்பதினாலிதுவே பிரமாணம்.

வினா: சகலபிராரத்தபோகங்க ளிருக்குமென்றும் ஞானம் வந்தாலும் பொசித்துத்தான் றொலைக்கவேண்டுமென்றும்சகலசுருதிஸ்மிருதிகளுஞ்சொல்லுவதன்றி நமக்குமனுபவமாயிருக்க வஸ்துத்துவமபிடலேயென்றுசொல்லுவதெப்படியெனின்,

விடை. பிராரத்தபோகம் அஞ்ஞானதிருஷ்டியினால் அப்பியாசகாலத்திலுண்டு, தத்துவ ஞானவுதயத்தி லில்லையென்றும் அப்பியாசிக

தேகப்பிராரத்தமன்றி ஆரூடனுக்கில்லையென்றுஞ் சுருதிஸ்மிருதிகள் சொல்லுகின்றது நமது அனுபவமுமப்படியேயாம்.

வினா. அதெப்படியென்னில்,

விடை. விழித்தவனுக்குச்சொப்பனமசத்தானதுபோல யதார்த்தஞானத்தில்தேகாதிகளசத்தாய்ப்போகிறபடியால் ஆரூடனுக்குப் பிராரத்தமில்லை அவனுக்கு அதீதமாகிய பிரமப்பிரகாசமொன்றுமே யேகமாய்விளங்கும் ஆதலாலந்தச்சொரூபமே நீயானாயென்பதிற் சந்தேகவிபரீதங்களின்றி அத்துவிதசின்மாத்திரமாயிருப்பாயாக இதற்குதாரணம்,

அபரோக்ஷாத்மானுபவதீபிகை - ஞானம்வந்தாலுந்தானே நவில்பிராரத்துவத்தைத்-தானேதுபொசித்துத்தீரவேண்டுமென்கின்றசாஸ்த்ரந்தானுமப்பியாசிக்கன்றித் தத்துவஞானிக்கில்லை-யானதத்துவக்கியானவுதயத்தேபிராரத்தங்கள் * என்றும்— உதயத்தேபிராரத்தமென்றொன்றிலலைத்தேகந்தானு !- மதேயசத்தாகையானுமதெப்படியென்னிற்றொன்கே-றுதயத்தேவிழித்தவர்க்குச்சொப்பனமசத்தானாற்போ-லுதயத்தேபிராரத்தங்களொன்றுமான்மாவுக்கில்லை - என்றும் — இல்லையேற்சென்மகன்மமில்லையோவென்றாலான்மா - வல்லதேயஜென்மரகிதனாகையாற்சென்மாந்தத்தின் - வல்லவைப்பிராரத்தத்தால்வருகின்றஜென்மமும்பொய்-யெல்லையிற்றேகஞ்சென்மமாச்சுதேயென்றாற்றேகம், என்றும்தேகமுமையற்கொம்பைப்போற் றேர்ந்திடிலில்லைகண்டா - யேகமாமாத்துமாவினிற்றிற்சொப்பனதேகங்க - ளாகவெப்படியாரோபமாச்சுதோவதுபோற்போமால்— தேகமுமாத்துமாவிற்றேறிலாரோபமாகும் * என்றும்—வாசிட்டம்—அந்தமற்றொன்றாய் விகற்பமற்றறிவாயழிவிலாப்பழம்பொருளிருக்கப் — பந்தமுற்றவரார் முத்திபெற்றவரார்பாவனை விகற்பமேயனேத்தாஞ் — சிந்தனைவிரிவுபந்தமாமதனைத்தீர்ந்திடின்முத்தியாமனத்தின் — றொந்தலிலையினைத்தாரமாமணித்தாந் தாருமண்ணிதாய்த்தோற்றும் * என்றும் - இவையெனுமனைத்துஞ்சிற்கனமாகியிறப்பிலாப்பிரமமேயென்று — நவையறுமனமாங்கற்பனையில்லை நாசமும்பிறவியுமென்னு — மவைகியலாப்புனையூன்றினுமில்லையறுவகைவிகாரமுமில்லை — கவைய

றுசமமாங்குறிபெறுமறிவு மாத்திரங்காணநின்றுளதால் * என்றும் - அ
த்துவிதவுண்மை - இல்லாமையைதங்கணிலேபாருநிற்கவம்மம — பொல்
லாப்பிறப்பிற் பட்டதுமாய்ப் பொக்கமிகவுந் தவிர்ந்ததுமாய் - நல்லா
ரிணக்கஞ்சேர்ந்ததுமாய் ஞானவிசாரமுதித்ததுமா - யெல்லாமாம்வி
டடைந்ததுமாயார்க்குங்காட்டிமறைந்திடுமே * என்றுங்-கூறப்பட்டிரு
க்கின்றதால்இப்படிதானாய்விளங்கிய நிலையிற்கிஞ்சித்தேனு மசம்பாவனை
நேரிடுமானால்அவ்வசம்பாவனையானதுகுருவினாலுஞ்சாஸ்திரங்களினாலு
ந்தீரமாட்டாது இந்தஅசம்பாவனையுள்ளவனை - சுவானுபவத்திற்சந்தேக
ம்பிறந்துதீர்க்கதிலெகொள்ளாமல்தவறுகையினால் ஆத்மத்துரோகியென
றும் பிரமத்துரோகியென்றும் சொல்லுவதன்றி இதைப்போக்குதற்கு
மேலனுபவமுஞ்சாத்திரங்களு மில்லாமையினால் இந்தத்துரோகமொன்
றினாலு நீங்கமாட்டாதென்று நான்கு உபநிஷத்துக்கள் சொல்லுகின்றன
இதற்கு உபநிஷத்பிரமாணம் * சுலோகம் * சத்தியம்சத்தியம் புனஸ்சத்
தியம் சம்சயாசம்சயாகெதினாஸ்தி - அதோ அதோசம்சயோகதிதேவுநி
த்ரா நாஸ்திநாஸ்தி - சம்சயோகதிரவுரவோப்பிரவுரவோ
இகபரநாஸ்திநாஸ்தி - பலோர்ப்பவவாக்கியோசம்சயாகதி நாஸ்திநாஸ்தி
* என்றுங் - கூறப்பட்டிருக்கின்றதால்அசம்பாவனைக்கிடமாகிய இதரசா
ஸ்திரங்களைப்பார்க்கலாகாதுபார்த்தபோதிலும் தனதுயதார்த்தமாகிய சு
வானுபவதிருஷ்டிவிடாமலிருந்துபூர்வபட்சமாயெண்ணிச்சாவதானமா
ய்ப்பார்த்தறியவேண்டியது * இதற்குதாரணம் - சிவஞான நிலயம் - த
ன்னெஞ்சந்தனக்குச் சான்றதுவாகத்தத்துவ நன்குணராதே —— வல்லெ
ஞ்சனுகிக்கூடமேபுரிவோன்வஞ்சகக்கூற்றினுங்கொடியோன் —— பன்னு
ங்காலவன்றன்றரிசனம்பரிசம்பழுதுறுநிரயவேதுவுமாம் - புன்னெஞ்
சாலவனும் போய்நரகெய்திப்பூமியுள்ளளவுமேறுனால் * என்றும் - ஞா
னமாயிலிங்கந்தம்முளத்தின்றி ஞானிகள்வேடமேமருவி - பூணதேவனா
த்தங்குண்டிலைதனத்தின்பொருட்டினாலிழிதருகின்ற - வீணமாஞ்சோ
ரஞானிகணிரயமெய்துவரெய்தியாங்குழைத்துத் - தீனமாந்திரியக்கியோ
னிடோறுஞ் செனிப்பது மரிப்பது மாவார் * என்றும் - ஞானசித்தி

மறைமுதற்கலைகளியாவையுமுணர்ந்து பாசறவுணர்த்துமாசொடுந்தான்கறையுறும்விடயக்கருவெனுங்கடலிற் கருத்தழுந்தின்விழமாகி - லறைதருமவனேகன்மசண்டாளனறிவறவிருமையுமிழந்து - பொறியிலியவனைப்போலும்பாதகரிப்புவியினிலொருவருமிலையே * என்றும் . சாதிசண்டாளன் கதிபெருந்தருமம்வழுவலிற்கன்மசண்டாள - னோதியவழிகளொன்றினுங்கதிதானுற்றிடானென்பதுண்மையதே - நீதியாங்கருமம்விட்டுஞானத்தேநிச்சயர்நிலைபிறழ்ந்தவர்போற் - றீதுறவொழுகுஞ்சோரமேயென்றுற்றீக்கதியுறுவலோதிமே * என்றும்-ஞானசாரம்-வேதவாகமங்கள் மிருதிநூல்புராணமிக்கவெக்கலைகளும்பயின்று - போதமேசொல்லிப்போதமங்குணராப் புலையருங்கழுதையுநிகராங் - கோதிலாவாரங்குங்குமம்பளிதங்குலவியபுழுகடைப்பொதிதா - னேதமேயமந்தகழுதையிங்கிவனிவேற்றமாய்வஞ்சமின்மையினல் * என்றும் - கிழுறு கருமமேவியபதத்தோன்கிளர்தவத்தவன்வியாங்கலையின்வாழிபங்குயர்ந்தோனென மறைமொழித்து மற்றவனைப்பதமழியி-னழியநரகமலதிலை யெனுமாலதிவன்னாச்சிரமமுற்றழிந்தோன் குழுறும்பதிதனுமிலனவன்பேர்சொல்லினும்பஞ்சபாதகமே * என்றும்-மெய்ம்மொழி கொலைமுதலைம்பாதகமுங் கோதறவேதமையுணர்ந்தோர்க்குண்டெனுங்கன்னிற்-சமமுறு சேதனவடிவைச் சடமாய்ப்பார்க்கலிற்கொலைதன்மயக்கங்கள்ளா-மலைமனமாதிகளென தென்றிடல்களவைசெய்தேலொன்றல்பொய்யாம் நிலையிலுடலுறவின்பமெனவைம்பாதகமுணர்ந்தோர்நித்தர்சுத்தர் * என்றும்அமிர்தசாரம் யோகத்திலுண்மையுணர்வன்றியுண்பொருட்டா-லோகத்தினின்றுமெனைவியம்பிமோகம்-மனத்தவலமாற்றுதவல்வேடர்தம்மை-நினைத்தவருங்காணார்நெறி * என்றுங்கூறப்பட்டிருப்பதால் அசம்பாவனை சம்சயபாவனை விபரீதபாவனைகளற்றுத் தானேதானாய்சுயம்பிரகாசமாய்ச்சொரூபமாய்நின்மலமாய்நித்தியதிருப்தியடைந்து அந்தர்முக நிஷ்டையானசகசமாதியுடையவர்களேசதாநிஷ்டர்களாய் விளங்குகின்றவர்கள் இதிற்சம்சயமில்லைசித்தம்

ஐந்தாவது - உபசாந்திப்பிரகரணமுற்றிற்று.

[௫௮]

ஆறவது.

நிருவாணப்பிரகரணம்.

அவதாரிகை.

மேற்பிரகரணங்கள் ஐந்தினுஞ் சர்வஞானோத்தரனாய்விளங்குமுபசமனம் பெற்றுச் சீவன்முத்திசாக்ஷாத்கார துரியானுபவ நிலைத்துள்ள சிஷ்யனுக்குமேல் அசிபதலட்சியார்த்தமான அகண்டானந்த துரியாதீத சிவானுபூதிமாத்திரமாய் ரமித்திருக்கும்விதேகமுத்தி யனுபவஞ்சித்திக்கும்பொருட்டுநிருவாணப்பிரகரணங்கூறுகின்றார்.

கவி.

உள்ளதுறுசைவம்பாசுபதங்காளாமுகத்தினொடு ... . ✲
வின்றுமாவிரதம்வாமம் வயிரவமிவையாறுந் ... ... ✲
தன்றுமப்புறத்துலோகா யுதஞ்சமணபத்தனுடு ... ✲
மன்றுமீமாமிசன்றன்வயினவன்மாயாவாதி .... ✲
வாதமீராறிலுள்ள மதங்களின்வகுத்தநூலா ... ... ✲
லோதுறிற்பிராந்தியல்லாலுளப்பிராந்தியைத்தான்றீர்க்கா ✲
தேதினுற்பிராந்திதானுந் தெளிவிக்குநூலேதென்னில் ... ✲
வாதியாம்வேதாந்தத்தின்விசாரத்தாலறிவர்தானே... ... ✲

இதன்பொருள்.

வினா. சமய வுண்மையில் நிலைத்துள்ள சமயிகளுக்கு முத்தியின்றோ வென்னில்,

விடை. சைவம் பாசுபதம்காளாமுகம்மகாவிரதம்வாமம் வயிரவம் இவ்வாறும் அகச்சமயமென்றும்லோகாயுதம்மீமாம்சம் பௌத்தம் சமணம்பாஞ்சராத்திரம் மாயாவாதம் இவ்வாறும் புறச்சமயமென்றுஞ் சொல்லப்படும்; அவற்றுள் உட்சமயத்தில் சைவமான தபோதிவாகிய சிவ ஞானிவிக்கச்சிவன்றிவாவென்றும் ஆண்டவனுமடிமையுமா யிருக்கவேண்

டுமென்றுஞ்சொல்லும்-பாசுபதமானது - பரமாணுவுபாதானமாய் நி
ன்று அதன்புணர்ச்சியேகாரணமாயுலகம் பண்ணப்பட்டதென்றும்இறை
நிமித்தகாரணமாய் நிற்குமென்றும் உயிர்களெல்லா மலங்களாற் பிணிப்
புண்டுகிடக்குமென்றுஞ் சொல்லுவதன்றி ஆகமத்தின்முறையே ஆவாக
னம் பண்ணியருச்சித்துப்பிணிப்பாகியபாசமறுத்து அணுவாகிய சிவஞ்சி
வனாகியபதியைக் கூடுமென்றுஞ்சொல்லும்காளாமுகம் மகாவிரதயாகிய
விரண்டும் அத்தியந்தஞ்சடை முதலானவடையாளங் கொண்டுபத்தியோ
டுஞ்சிவனைவழிபட்டருச்சித்து நியமங்குலையாதிருந்தால் வினையுடல்விடு
ம்போதுசிவலோகத்தையடையலாம் அதுவேமோட்ச மென்றுஞ் சொல்
லும்-வாமமானது-மதுமாமிசங்கொண்டு சத்தியான ஸ்திரீகளைப்பூசித்து
அவர்கள்சேடமூட்கொண்டு அந்தப்போதை யானந்தத்திருப்பதே மோ
ட்சமென்று சொல்லும்-வயிரவமானது - மயானத்திருந்துஎன்புதரித்து
சாம்பற்பூசி யுபவாசமாயிருந்து மாவயிரவனென்று மோமமூண்டாக்கி
நரபலிகொடுத்து அந்தநரமாமிசமும மதுவுங்கபாலத்தில்வைத்து ஓமத்தி
லாகுதிபண்ணி அம்மதுவுமாமிசமு மறுநாள்கொள்வதேபாரணமென்று
ம்இப்படிசெய்துமுடிந்ததே நிருவாணவீடென்றுஞ்சொல்லும்-மீமாம்
சமானதுபசுபடுத்தியாகம்பண்ணி அந்தயாகபலத்தினால்தேவர்களாய்சுவ
ர்க்கத்திருப்பதேமோட்சமென்றும் வேதாத்தியாயனம் பண்ணுஞ்சத்த
மேபிரமமென்றுஞ் சொல்லும்-பௌத்தமானது இந்திரியங்களினறிவே
ஞானமென்றும்பூதாகாசமேயாத்மாவென்றுஞ் சொல்லும் - சமணமாவ
து இந்திரியநிக்கிரகியாய்க் காமத்திற்புகுதாமலிரவுணவுகளை மறுத்துஉ
டலையொறுத்துச் சிகைபறித்திருப்பதேபொன்னெயில்வட்டத் தருகரு
டன்சேர்வதென்றும் சொல்லும்- பாஞ்சராத்திரமானது-ஆதிமூலமான
விஷ்ணுவே தமதுமாயையினால் உலகுயிரெல்லா முண்டுபண்ணினனென்
றும்அந்தமாயையே யவருக்குவடிவமென்றும்வசுதேவர் முதலான நால்
வர்களின்சமாராதனத்தாற் சீவர்கள்பெத்தம்விட்டுப்பரமபதம்பெறுவா
ர்களென்றும்சொல்லும் - மாயாவாதமானது நானென்னுமகங்காரியேபி
ரமம்அவருக்கு ஒருவிகாரமுமில்லை அவர்சந்நிதான விசேடத்தால்மாயை

சேடித்துநின்றஉலகுயிருக்குசெய்ததென்றும்பந்தமோட்சமில்லை-யெ
ன்றுஞ்சொல்லும்- இந்தப்பன்னிரண்டினுள் பாஷாண்டம் விரோசனம்
சாருவாகம் உபாசகம்க்ஷணிகவாதம் அந்தராளம் ஆகமம்திகம்பரம்பிரபா
கரம் தார்க்கிகம்பாட்டம்சாங்கியம் யோகம்பதஞ்சலியம் விஸ்வரூபம்பிர
சாபத்தியம்காருபத்தியம் கௌமாரகம்பௌராணிகம் கன்மசாஸ்திரம்
என்றுசொல்லப்பட்ட அனேகமதங்களுண்டு அவர்களெல்லாம் தங்கள்த
ங்கள் மதாபிமானமேமேற் கொண்டுமந்திரவாதம்ரசவாதமுதலிய சாஸ்
திரங்களைத்தொடுத்து நின்று பிராந்தர்களாயலைந்து போனார்களென்று
பஞ்சதசப் பிரகரணத்திற் பிரமாணமிருக்கின்றபடியினால் சடயிகளுக்
குமுத்தியில்லை.

வினா. சிவவாதிகளுடனே ஈஸ்வரவாதிகளையும் பிராந்தர்களென்றுசொ
ல்லலாமோவென்னில்.

விடை. சொப்பனத்திற் பிட்சையெடுக்கிறவனிலும் அரசனாயிருக்கிறவ
னதிகமானாலும் விழித்தபிறகுஇரண்டுசொப்பனமும் பொய்யா
னதுபோலஇருவகைவாதிகளும்கற்பிதத்தில்தாரதம்மியமாயிரு
ந்தாலும் ஞானம்வந்தவனைக்குறித்து இருவகைவாதிகளும்பிரா
ந்தர்களென்றேசொல்லவேண்டும்.

வினா. இப்படிவேதாந்தவிசாரத்தினால் வஸ்து நிர்ணயம்பண்ணுவதா
னால் அந்தவாதிகளுக்கெல்லாம் விரோதமல்லவோவென்னில்,

விடை, ஒன்றேபொருளென்றவேதாந்தத்திற்கும் அதைத்தானே குருடர்
யானைகண்டதுபோற் கண்டிருக்கின்றமதவாதிகளுக்கும் சற்றும்
விரோதமில்லை.

வினா. ஒன்றேபொருளென்னும் வேதாந்தத்திற்கும் மற்றுள்ள மதங்க
ளெல்லாமாயாமயமென்பதற்குப் பிரமாணமுண்டோவென்னில்

விடை, முப்பத்திரண்டுஉபநிஷத்துமேபிரமாணமென்று பஞ்சதசப்பி
ரகரணத்தில் நிருபித்திருக்கின்றதேபிரமாணசித்தம்.

வினா. விசாரஞானத்தினால் வஸ்துநிர்ணயம்பண்ணுவ தெப்படி யெ
ன்னில்.

விடை. ஷட்லிங்கதாற்பரியங்கொண்டு வேதாந்தவிசாரம்பண்ணின சிர
வணபலத்தினால்வஸ்துநிர்ணயம்பண்ணவேண்டும்.

வினா. அதெப்படியென்னில்.

விடை. உபக்கிரமம்உபசங்காரமென்றொன்று அப்பியாசம் அபூர்வதை
பலம்அர்த்தவாதம்உற்பத்தியென்றாறுவகைகளாம்.

வினா. உபக்கிரமமாவதேதென்னில்.

விடை. அகண்டபரிபூரணசச்சிதானந்தபிரமத்தினிடத்தில் ரச்சுவிற்சற்
பற்தோன்றினதுபோலசகலபிரமாண்டபிண்டங்களாகிய சகத்து
ண்டாயிற்று, இந்தச்சிருஷ்டிக்குமுன் பிரமஞ்சத்தாமாத்திரமா
யிருந்ததென்றுபிரதிபாதிக்கப்படுவதேஉபக்கிரமம்.

வினா. உபசங்காரமாவதேதென்னில்.

விடை. உற்பத்தியானசகலசெகத்தும் அபவாதக்கிரமமாகவொடுங்குதை
யால்பிரமாண்டபிண்டங்களென்னுமுபாதியிற் கூடஸ்தருக்கும்
பிரமத்துக்குமுள்ள வுபாதிகளையொழித்து ஏகத்துவ அயிக்கத்
தைக்கூறப்படுவதேயுபசங்காரம்இவ்விரண்டுமொரேலிங்கமாம்.

வினா. அப்பியாசமாவதேதென்னில்.

விடை. பிரத்தியேகான்மாவாகிய நீயே பிரமமென்றொன்பது பிரகார
மாகவுபதேசிப்பது அவ்வுபதேசம்சேதனனைக்கூட்டிச்சொல்லு
தினாலும் சேதனனுக்கே அத்தொய்தஆத்தும தத்துவம் போதி
ப்பதினாலும்அஃதேஅப்பியாசம்.

வினா. அபூர்வதையாவதேதென்னில்.

விடை. அஷ்டப்பிரமாணங்களினுள்உபநிஷத்பிரமாணத்தினாற் பிரத்தி
யேகாத்மலக்ஷணத்தையறியப்படுவதன்றி மற்றைப் பிரமாணங்
களினாலறியப்படாதென்பது.

வினா. அஷ்டப்பிரமாணமாவதேதெனில்.

விடை, பிரத்தியட்சம்அனுமானம்உவமானம்ஆகமம் அருத்தாபத்திஐதி
கம் சம்பவம் என்றெட்டுவிதமுண்டு,

வினா. அவற்றுள்பிரத்தியட்சப்பிரமாணமேதென்னில்,

விடை, பிரத்தியட்சத்தில்சந்தேகப்பிரத்தியட்சம்விபரீதப்பிரத்தியட்சம்யதார்த்தப்பிரத்தியட்சமென்றுமூன்றுவிதமாயிருக்கும்அவற்றில்கட்டையைக்கண்டு கட்டையோகள்ளனோவென்று சங்கற்பித்தது சந்தேகப்பிரத்தியட்சம்-கள்ளனென்றே விகற்பித்ததுவிபரீதப்பிரத்தியட்சம்கட்டையென்றறிந்ததுயதார்த்தப்பிரத்தியட்சமென்று சொல்லப்படும்

வினா, இவற்றிற்சொரூபவபிப்பிராயமேதென்னில்.

விடை, யதார்த்தப்பிரத்தியட்சத்திற் கொருபிரமாணமும் வேண்டுவதின்றுசந்தேகவிபரீதபுத்திநிவிர்த்திக்கேப்பிரமாணங்கள் வேண்டுவதாகையால் ஆசிரியர் பிரஞ்ஞானம்பிரமமென்று இருக்குவேத மகாவாக்கியத்தையுபதேசிக்கச் சீடனும்அறிவே பிரத்தியட்சத்திற் பிரகாசிக்குமானால் தேகாதிசெகத்தெல்லாம் பிரத்தியட்சத்திற் காணப்படுகின்றதாகையால் நான்தேகமோஅறிவோஎன்றதேசந்தேகப்பிரத்தியட்சம் நான்தேகமென்றுறுதிகொண்டதே விபரீதப்பிரத்தியட்சம் நான் பிரமமென்று நிலைத்ததேயதார்த்தப்பிரத்தியட்சம் இவ்யதார்த்தப் பிரத்தியட்சத்திற்கு வேறுபிரமாணங்கள் வேண்டுவதின்றுசந்தேக விபரீதபுத்தி நிவிர்த்திக்கேஅனுமானப்பிரமாணமும்விசாரிக்கவேண்டும்.

வினா, அனுமானப்பிரமாணமாவதேதென்னில்,

விடை, அனுமானத்தில்பிரதிக்ஞை எதுதிருஷ்டாந்தமெனமூன்றுவிதமுண்டு அவற்றில்பர்வதங்களிலக்கினியுண்டென்பதுவே பிரதிக்ஞை, தூமமுள்ளதுகாரணமென்பதே எது, மகானசத்திலக்கினியுண்டென்பதுவே திருஷ்டாந்தமாம்,

வினா, இவற்றுள்பிரதிக்கினையிற்சொரூபவபிப்பிராயமேதெனில்,

விடை, பூதங்களானதுதடித்துடயவுஜீவசராசரமானவோர் தேகத்தைக்

றித்து இவ்வுடம்பின்கண்ணறிவாகிய பிரமமிருக்குமென்று நிச்சயிப்பதேபிரதிக்ஞை,

வினா, ஏதுவிற்சொரூபவபிப்பிராயமேதென்னில்,

விடை, தேகேந்திரியாதிகளிலறிவுநின்று பகுத்தறிகின்றது தேகேந்திரியாதிகள் சடமாகையால் அறியச்சத்தியில்லை தேகேந்திரியாதிகளே யறிவதானால்சுழுத்திமூர்ச்சைசமாதியினிடத்துமறியவேண்டுமேஅங்ஙனமறியாமையினால் இந்திரியங்களிற்பகுத்தறிவிருப்பதுகொண்டு இவ்வறிவுக்காதாரமானபிரமமொன்றிருக்குமென்பதே ஏது.

வினா, திருஷ்டாந்தத்திற்சொரூபவபிப்பிராயமேதென்னில்,

விடை, பிரத்தியட்சத்திலெழும்பின புகையைக்கண்டு அப்பிரத்தியட்சமான அக்கினியிருக்குமென்றறிந்ததுபோல தேகேந்திரியாதிகளினின்றறியுமறிவைப்பிரத்தியட்சத்திற்கண்டு யாவராலுமறியப் படாததாய் அவாங்மனதீதமானபிரமமொன்றிருக்கிறதென்றறிவதே முக்கியப்பிரயோசனமென்றுசொல்லப்படும்-பூதபவுதிகசராசரங்களிலும்அறிவாகியபிரமமிருக்கிறதென் றனுமானத்திற்காணப்பட்டதன்றிப்பிரத்தியட்சத்திற் காணப்படவில்லை - அஃதென்ன லட்சணமுடையதாயிருக்குமோவென்றபுத்திவிருத்திபரிகரிக்கவேண்டி உவமானப்பிரமாணமும்விசாரிக்கவேண்டும்.

வினா, உவமானப்பிரமாணமாவதேதென்னில்,

விடை, மனாமிருகமென்றதொன்றுண்டென்றுகேள்விப்பட்டவன் அதை அறியவேண்டியஆவலினாலறிந்தபேர்களைவினவ அவர்களுமேகதேசதிருஷ்டாந்தமாய் இந்தப்பசுப்போலிருக்குமென்பது உவமானப்பிரமாணம்,

வினா, இதிற்சொரூபவபிப்பிராயமேதென்னில்,

விடை, பிரமத்தையறியவிருப்பினவன்பிரம சொரூபமெப்படியிருக்குமென்று பெரியோர்களைவணங்கிக்கேட்கஅவர்கள்அதற்கொருவு

மையினாலும் ஏகதேசதிருஷ்டாந்தத்தினாலுமறிவிக்கவேண்டியதினால் அ
ந்தப்பிரமச்சச்சிதானந்தசொரூபலட்சணமாய் இந்தப்பூதாகாசம்போல
வியாபகப் பட்டிருக்குமென்றுசொல்ல ஆகாசலட்சணமென்னவென்று
வினவஆகாசம்நான்குபூதங்களுக்குமாதாரமாய்தானொன்றும்பற்றாதி
ருக்கையாலும் நான்குபூதங்கட்கும் ஆகாசத்தைத் தவிர விருப்பிடமின்
மையாலும் நான்குபூதமுமாகாசமேயாதாரமாயிருந்து கொண்டுஅந்த
ஒருஆகாசத்தையேகடாகாசம்மடாகாசம் சலாகாசம் மகாகாசமென்றுஉ
பாதிவசத்தாற்கண்டு கூறப்பட்டபோதும் அவ்வாகாசத்திற்கு இந்நான்
குபூதங்களைக்குறித்துவந்தவுபாதிகள் சற்றுமின்றி இந்நான்கு பூதங்களை
யுங்கவளீகரித்ததிக்கிரமித்து அவயவமின்றி நிரவயவமாயிருக்குமென்ன
க்கேட்டு அந்தப்பிரமமும் இவ்விலக்கணமுடையதா யிருக்குமென்றுப
ரோட்சமாயறிந்ததே அபிப்பிராயம் இவ்விலக்கணமுடைய பிரமமான
து இருக்குமிடந்தெரியவரவில்லையேயென்றபுத்திவிருத்தி பரிகரிக்கவே
ண்டி ஆகமப்பிரமாணமும்விசாரிக்கவேண்டும்,

வினா, ஆகமப்பிரமாணமாவதேதென்னில்,

விடை, சொர்க்கலோகத்தில் அமிர்தமிருக்கிறதென்றுங்காசியி லிச்சந்
திரன்மயானங்காத்த பரண்காலின்னமிருக்கிறதென்று மாகமஞ்
சொல்லக்கேட்டுஅதில் நிச்சயபுத்திவந்ததே ஆகமப்பிரமாணம்

வினா, இதிற்சொரூபவபிப்பிராயமேதென்னில்,

விடை, ஏகமேவாத்துவிதம்பிரமமென்ற சுருதிவாக்கியமும்மேனியிற்பு
றத்தினுள்ளின்மேலொடுகீழ்த்திக்கில் வானில் வையகத்திலெங்
கும் மானிலாவிடமுமில்லையென்றஸ்மிருதிவாக்கியமும்சோதிதானாயிரு
ந்தாற்பிரமதானென்ற வுபநிஷத்வாக்கியமும் பிரமாணமாகச்சொல்ல,
சுரோத்திரவிடயமாய்க்கேள்வியுற்று தன்னிடத்தில் அந்தச்சச்சிதானந்த
சொரூபலட்சணமிருக்கிறதா வென்று விசாரிக்குமளவில் சென்மாந்தர
கன்மத்தாலிந்தச்சரீரம் இப்போதுவந்ததென்றும் இப்போது செய்கிற
கன்மத்தினா லினிவருகாலத்திலும் தேவமனுஷதிரியக்காதி ஜென்மங்கள்

வாருமென்றும் அனுபவமிருப்பதால்சத்தாச்சுது மேலும்-திரிகாலத்திலுமுண்டானசரீராதிகளழிவதும்அவற்றால்வரும் சுகதுக்கமானவமானஹானி விருத்திலாபாலாபங்களையும்அறிவாயிருந்தறிகின்றதால் சித்தாச்சுது-மேலும்-சத்துவேறுசித்துவேறென்றுபிரித்துப்பார்க்கவிரண்டில்லாமையினாலானந்தமாச்சுதுபின்னும்அறிவானதுபற்றற்றிருக்க,தேகேந்திரியாதிகரணங்கட்கு மவ்வறிவைத் தவிர விருப்பிட மின்மையாலும் அறிவேயவைகட்காதார பூதயாயிருப்பதினாலும் இந்தத்தேகேந்திரியாதிகரணங்கட்குமவ்வறிவேயாதாரமாயிருந்தது கொண்டு அவ்வறிவுதானேகூடஸ்தனென்றுஞ்சீவனென்றுமீசுரனென்றுமுபாதிவசத்தினாற் பின்னமாகக்கண்டம்போலும் பரிச்சின்னம்போலுங் காண்பித்தவிடத்திலும் அவ்வத்வியாதியபிரமத்திற்குத்தேகேந்திரியாதிகளைக்குறித்துவருமுபாதிகளின்றித்தேகேந்திரியாதி கரணசீவனையுங்கவளீகரித்ததிக்கிரமித்தும் அவயவமின்றிநிரவயமாயிருப்பதினாலும் முன்பரோட்சமாயறியப்பட்ட சச்சிதானந்தசொரூபத்தைத்தானென்று அபரோட்சமாயறிந்ததே ஆகமப்பிரமாணநிர்ணயம்முற்கூறியமூன்றுபிரமாணங்களினாலும்வஸ்து நிச்சயங்கூடாது-இந்தப்படிஎப்போதுஞ் சச்சிதானந்த சுபாவமாயிருக்கமூன்பெத்தத்திசையிலிந்தலட்சணமறியாமற்போன தென்னவென்றுவருகிறபுத்திவிருத்தியரிகரிக்கும்பொருட்டு அருத்தாபத்திப்பிரமாணமும்;விசாரிக்கவேண்டும்.

விஞா. அருத்தாபத்திப்பிரமாணமேதென்னில்.

விடை, திருஷ்டவருத்தாபத்தியென்றுங் கேள்வியருத்தாபத்தியென்றுமிரண்டுவிதம்இதில்நித்தியவுபவாசியென்று பேரிட்டிருக்கிற ஒருவனது தேகபீனத்தைக்கண்டு இவனேகாந்தத்திற் போசிப்பனென்றறிகிறதே திருஷ்டவருத்தாபத்தி,

விஞா, இதிற்சொரூபவபிப்பிராயமேதென்னில்.

விடை. முன்பெத்தத்திசையினுஞ்சச்சிதானந்தமென்றிருந்துந்தன்னைத் தெரியவொட்டாமன்மறைத்ததேயருத்தாபத்தி - அதற்குச்சகல

பிராணிகளுமனுபவமாக நான்பூர்வஜென்மத்திற்செய்யாநின்றபுண்ணிய பலத்தினால் இந்தச்சென்மத்திலும்நல்லஜாதிகுலகோத்திரவருணதேகரூப ஐஸ்வரியமனையாதி சம்பத்துமுண்டாயிற்றென்றும் இப்போதுசெய்யும்புண்ணியகன்மத்தினால்இனிமேலுந் தேவமனுடராய்ப் பிறப்பேனென்றும்முன்சென்மத்திற் கொடுத்துவைக்காத பாவியாகையால்இப்போதுந்தரித்திரனாயிருக்கிறேன் இந்தச்சென்மத்திலும் ஒருவருக்குங்கொடாததரித்திரனாயிருப்பதினால் வருசென்மத்திலுந் தரித்திரனாய்ப்பிறப்பேனென்றும் இன்னவருடம்இன்னமாதம் இன்னதிதிநட்சத்திரயோககரணவாரத்திற்பிறந்தேனென்றும்இந்தமட்டுஞ்சவுக்கியத்தை யனுபவித்தேன் இனிபொல்லாதகஷ்டம்வரப்போகிறதென்றும் அந்தக்கஷ்டந்தீருமேலிந்தச்சரீரநில்லாதென்றும்இப்படி திரிகாலங்களிலுமுண்டான ஆனிவிருத்திகளுக்கலாபாலாபமானவமானங்களையு மறிந்திருக்கிறதினால்தான் சச்சிதானந்தலட்சணமாயிருந்துந்தெரியவில்லை என்றஞேயஞ்ஞானம், அஞேயஞ்ஞானமானால்தெரியவில்லையென்றவறிவுவரக்கணக்கில்லை ஈதறிவுதானென்றால்அறிஞேயனென்னுமஞ்ஞானம்வரக்கணக்கில்லை ஆகையால் இந்தஅருத்தாபத்தியேசுத்தமானதன்னைத்தெரியவொட்டாதுமறைத்தநிலைமைபெற்றவஞ்ஞானம்நித்தியவுபவாசியென்பவனுடையசரீரமினையாந்துகன்று ரகசியத்திற்போசிப்பனென்றறிவதுபோல தான்சச்சிதானந்தலட்சணமென்பது தோற்றியிருந்தாலுந்தன்னனுபவத்தினாலன்றிவிசாரித்தறிந்தால்தானேசச்சிதானந்தசொரூபமாவன்இதுவேதிருஷ்டவருத்தாபத்தி-இப்படி சச்சிதானந்தசொரூபமென்பது அனுபவமாயறிந்திருந்தும்முன்போலவே நாமரூபாதிகள்தோற்றுவதன்றி அந்தலட்சணமிருந்தால்தோற்றாதாவென்றுவருகிறபுத்திவிருத்திபரிகரிக்கும் பொருட்டு கேள்வியருத்தாபத்திப்பிரமாணமும்விசாரிக்கவேண்டும்,

வினா. கேள்வியருத்தாபத்தியாவதென்னவெனில்,

விடை, ஓர்புருஷன் அடுத்தகிராமத்திலிருக்கும் ஒருவனைக்காணவேண்டி வந்து அவன்மனைவாயிலின்று இந்தக்கிரகவாசியி [illegible]

[illegible]

னை அபாவசத்தங்காதிற்கேட்டும் அவனிறந்துபோகவில்லைஅன்னி
யதானங்களிற்போயிருப்பானென்றறிந்துகொண்டதேகேள்வி
யருத்தாபத்தி,

விரு, இதிற்சொரூபவபிப்பிராயமேதென்னில்.

விடை, நாமரூபாத்மகங்களினுமாத்மாவில்லை யென்றறிந்தவறிவுமாத்தி
ரமிச்சமாயிருக்கக்கண்டதேஇல்லையென்றகேள்வி யருத்தாபத்தி
யின்பிரயோசனமாம்-அறிவேவடிவாயிருப்பதாத்மாவானால் அறிபொரு
ளைக்குறித்தேயறிவென்றபேரிருக்கிறதாகையால்அறிபொருளாகிய ஜீவே
சுவரசகத்தும்அதன்காரணமானமாயையும் அநாதியாயிருக்கவேண்டும்அ
ப்போதுஅதுகளுக்கு நித்தியத்துவம் வருமேயென்னும் புத்திவிருத்தி
பரிகரிக்கும்பொருட்டு அபாவப்பிரமாணமும் விசாரிக்கவேண்டும்,

விரு. அபாவப்பிரமாணமாவதேதென்னில்,

விடை, பிராகபாவம்பிரத்தொம்சாபாவம்அன்னியோன்னியாபாவம்அத்
தியந்தாபாவம்என நான்குவிதம்

விரு. இவற்றுள்பிராகபாவமாவதேதென்னில்

விடை, குலாலன்சக்கரத்திருக்குமிருத்திகாபிண்டத்தைப்பார்த்து இதிற்
கடமில்லையென்றதுபிராகபாவம்,

விரு, இதிற்சொரூபவபிப்பிராயமேதென்னில்,

விடை, கடமில்லையென்றஅபாவத்திற்குஅநாதித்துவமனந்த கற்பங்களா
யிருந்தும் நித்தியத்துவஞ்சித்திக்கவில்லை- எப்படியென்றால்கு
லாலன்சக்கரத்தைச்சுற்றிமிருத்திகாபிண்டத்திற்கைவைத்தபோதுமுன்னி
ல்லாதகடகம் உற்பத்தியாயிற்று ஆதலால்முன்னில்லையென்றவபாவத்தி
ற்கநாதித்துவமிருந்தும் அநித்தியத்துவஞ்சித்திச்சது அதுபோலமாயை
யுமதன்காரியமானஜீவேசுரசகத்தும் அநாதித்துவமென்றசிறிதுசாஸ்திர
ங்களிற்கூறப்பட்டிருந்தாலும்விசாரஞானமான விருத்திஞானத்தினாற்ற
[illegible]ப்பட்டு அநித்தியமாய்விடுமென்பதேபிராகபாவப்பிரயோசனமாயி
ற்று-விருத்[illegible]பியவிக்கும் விருத்திஞானத்தினாற்றகிக்கப்பட்டமா

யையும்அதன்காரியமான சீவேசுரசகத்துப்விருத்திஞான மொழிந்தவிடத்துமுன்போலப்பிரத்தியட்சமாய்த்தோற்றுமேயென்றபுத்திவிருத்திபரிகரிக்கும்பொருட்டுபிரத்தொம்சாபாவமும் விசாரிக்கவேண்டியது,

வினா, பிரத்தொம்சாபாவமாவதேதென்னில்,

விடை, ஓர்தரித்திரனுணயாசகன் ஓர்கடமேஆசத்தியாய்க்கொண்டு பாவவசத்தினால் மனைகடோறுமிரந்துகொண்டிருங்காலத்தில்அம்மனைகளிலுள்ளசிறுவர்கள்அஞ்ஞானகிரோஷ்டவுச்சாகத்தினால் கற்கொண்டெறிய அவ்விரப்பன்கடவாஞ்சையினால் அக்கல்லெறிகளனைத்தும் தன்சரீரத்திற்றுங்கிமதித்துஞ்சகிக்கமாட்டாமல் அவனுக்கேவிரத்திதோன்றி அக்கடத்தைஓர்கற்பாறையின்மோதஅக்கடமுடைந்து சில்லுகளாய்ச்சிதறிவிட்டதுபிறகுகடவாஞ்சையினால்அவன் புரண்டுபுரண்டழுதாலும்உடைந்தகடம்வரமாட்டாதென்பதேபிரத்தொம்சாபாவம்,

வினா, இச்சொரூபவபிப்பிராயமேதென்னில்,

விடை- முன்விசாரஞானத்தாற்றகிக்கப்பட்டமாயையும் அதன் காரியமானசீவேசுரசகத்தும்மீண்டு கற்பகாலத்திலும் உண்டாகமாட்டாதென்றறிவதேயபிப்பிராயம்கடமுடைந்தும் அதன்காரியமறைந்து காரணமாகாமல்கடமேவாடென்றகாரியவுபாதிகாண்பதுபோல விருத்திஞானத்தாலழிந்த மாயையும்அதன்காரியமான சீவேசுரசகத்தும் காரணமாய பிரமமாத்திரமாய்ப்போகாமல்மாயாகாரியமான சீவேசுரசகத்தொன்றுஅறிவிற்றோற்றக்கண்டிருப்பதால் அந்தமாயையும் வஸ்துத்துவயமாயிருக்கும்ஆகையால்பிரமத்தில் மாயையுண்டுமாயையிற் பிரமமிருக்குமென்றபுத்திவிருத்திபரிகரிக்கும்பொருட்டுஅன்னியோன்னியாபாவமும்விசாரிக்கவேண்டியது,

வினா, அன்னியோன்னியாபாவமாவதேதென்னில்.

விடை, படத்திற்கடமும்கடத்திற்படமுங்காலத்திரயத்திலுமில்லையென்றறிவதேஅன்னியோன்னியாபாவம்,

வினா, இதிற்சொரூபவபிப்பிராயமேதென்னில்,

விடை, அத்துவிதம் அவிநாசம் உவமானரகிதம் அவாங்மனோகோசரம் பவுனரீதம் அத்தியாதிப்பிரியலட்சணம் ஆகிய குணங்களையுடையதே பிரமசொரூபம்• அவிதம் திரிசயம் மனவாக்குகோசரம் அனிர்வசனம் ஆகிய குணங்களையுடையதே மாயா சொரூபம் அம்மாயா சொரூபத்தில் பிரமசொரூபமில்லை- பிரமசொரூபத்தில் மாயா சொரூபமில்லையென்றறிகிறதிடம் வந்ததேயபிப்பிராயம் - இது நாமரூபமென்றும் மாயையென்றும் நினைவில் தோற்றுகிறது அந்த மாயையில்லாவிட்டால் நினைவில் தோற்றமாட்டாது ஆகையினால் மாயையுமிருக்குமென்று வருகிறபுத்தி விருத்திபரிகரிக்கும்பொருட்டு அத்தியந்தாபாவமும் விசாரிக்கவேண்டியது.

விறு, அத்தியந்தாபாவமாவதேதென்னில்,

விடை, ஒருபுருஷன் தனது சொப்பனத்தில் தான் சாகவும் தன்னைத் தகனஞ்செய்யவும் மறுநாள் காடாத்தி அஸ்தியெடுத்துக் கும்பத்திலடக்கி கங்கையில் விடவுங்கண்டு பிறகு விழித்து சாக்கிரத்தில் மனத்தால் நினைக்கவாக்காற் சொல்லவந்தும் மெய்யாகாமற் பொய்யென்றறிவதே அத்தியந்தாபாவம்

விறு• இதிற்சொரூபவபிப்பிராயமேதென்னில்•

விடை, மாயையென்றும் ஈசுவரனென்றும் நாமரூபங்களாய்ச் சொன்னாலும் நினைத்தாலும் சுத்தமித்தையே எப்படியென்றால் ஆகாசத்தில் தாமரைப்பூத்ததென்று நினைவில் தோற்றினாலும் அது எப்படியில்லையோ அதுபோல மாயையென்று நினைவில் வந்தாலுங் காலத்திரயத்திலுமில்லையென்றறிடம் வந்ததேயபிப்பிராயம் மாயையென்பது காலத்திரயத்திலுமில்லாதிருக்கச் சகலதேகிகளுக்கும் நாளுவாய் பிரசித்தமாய் உண்டு போலத் தோற்றுகிறதற்குக் காரணமேதென்று வருகிறபுத்தி விருத்தி பரிகரிக்கும்பொருட்டு ஐதீகப்பிரமாணமும் விசாரிக்கவேண்டியது,

விறு, ஐதீகப்பிரமாணமாவதேதென்னில்,

விடை, ஒருவனொரு ஆலமரத்திலேறி இலைபும்விறகும் தனக்குப்போதுமா

னமட்டும்பறித்துக்கொண்டு இறங்குஞ்சமயத்தில் ; வேறொருவ
ன்வந்து ஆரடாபயித்தியக்காரா இந்தமரத்தில்மகாயக்ஷனென்றும் பசாசி
ருக்கின்றதே இதினிடத்திலொருவருஞ்சேருகிறதில்லையே நீ இதிற் காலவை
த்தேறலாமாவென்றசத்தங்கேட்டமாத்திரத்தில் மனத்திற்பயமும் சரீரத்
தில்நடுக்கமு முண்டாயொடித்தவிறகும் பறித்தவிலைகளையுமெறிந்து வி
ட்டுமரத்திலிருந்திறங்கக்கால்தடுமாறிக் கீழேவிழுந்து மூர்ச்சையானதே
ஐதிகப்பிரமாணம்,

வினா, இதிற்சொரூபவபிப்பிராயமேதென்னில்,

விடை, மாயையும்மாயாகாரியங்களுங்காலத்திரயத்திலு மில்லாதஅசத்தமி
த்தையாலும்பிரத்தியட்சமாய்க்காணுதயக்ஷவிஷயம்அன்னியன்
சொற்கேட்டமாத்திரத்தில்இருக்கிறதென்று சத்தியபுத்திவந்ததுபோல
அந்தமாயாகாரியமானவிவகாரசகத்துக்கள்பிரசித்தமாயுண்டுபோல அச
ம்பாவனையாகியபிராந்திமூலப்பிரமையால் தோற்றுமென்றறிகிறதேதய
பிப்பிராயம்-மாயையென்பதில்லையானால் மாயாகாரியமானநாமரூபசகத்
தென்றும்சத்த பரிசரூபரசகந்தகாரணமென்றும் அனேகவிபரீதங்கள்
தோற்றுகிறதற்குக்காரணமேதென்றுவருகிறயுத்திவிருத்தி பரிகரிக்கும்
பொருட்டுசம்பவப்பிரமாணமும்விசாரிக்கவேண்டியது,

வினா, சம்பவப்பிரமாணமாவதேதென்னில்,

விடை. ஆயிரமென்னுங்கணக்கில்ஒன்றுஇரண்டு அஞ்சுபத்துநூறென்
னுங்கணக்குமிருக்கிறதென்றறிவதேசம்பவப்பிரமாணம்.

வினா, இதிற்சொரூபவபிப்பிராயமேதென்னில்,

விடை, சத்தமென்றறியும்போது அவ்வறிவேசத்தரூபமாயிருக்குமன்றி
ப்பரிசரூபரசகந்தகாரணபேதங்களுமில்லை - பரிசமென்றறியும்
போது அவ்வறிவேபரிசரூபமாயிருக்குமன்றிச் சத்தரூப ரசகந்தகாரண
பேதங்களுமில்லை - ரூபமென்றறியும்போது அவ்வறிவே ரூபமாயிருக்கு
மன்றிச் சத்தபரிசரசகந்தபேத காரணங்களுமில்லை - ரசமென்றறியும்போ
து அவ்வறிவேரசரூபமாயிருக்குமன்றிச் சத்தபரிசரூபகந்தகாரணபேத

ங்களுமில்லை - கந்தமென்றறியும்போது அவ்வறிவே கந்தரூபமா யிருக் குமென்றிச்சத்தபரிசரூபரசமரணமேதகங்களுமில்லை - ஆகையால் இந்திரிய சபளிதமாய்சத்தபரிசரூபரசகந்தங்களாய்த்தோற்றினவெல்லாம் அவ்வறி வாகியபிரமமேயதுவதுவாகத்தோற்றியது ஆனபடியினால் அறிவாகியபி ரமத்தில் அனேகம்போலஅறிவாகியதனக்கேதோற்றலாம் அன்றியுந்தா ன்சர்வசத்திமானாகலின் அனேகமுமிருக்கலாம் அப்படி யிருக்கையால் சர்வாதாரபூதமானநிருபாதிகப்பிரமமேயிருக்கிறதென்றறிகிறதேயபிப் பிராயம் இதுவேயபூர்வதை.

வினா, பலமாவதேதென்னில்.

விடை, இந்தச்சகலவஸ்துக்களில் ஒருவஸ்துவையறிந்தமாத்திரத்தில் சக லமுமிப்படியேயிருக்குமென்றறிவதுபோல ஆத்மஞானமறிந் தமாத்திரத்தில் சகலபிரமாண்டபிண்டங்களிலுந்தானாய் விளங்கும் பிரம மேநானென்றும் நானே ஆத்மசொரூபமாய் விளங்குவதென்றும் இந்தத் தேகேந்திரியாதி சகல சகத்தும் பிராரத்தமுள்ளமட்டும் மித்தையாய்த் தோற்றப்படுகின்றதுபிராரத்தநாசத்தில் சர்வாத்மகமாய்த் தோற்றாமல் அத்தொய் ஆத்மசொரூபமாத்திரமாய்ப் பிரகாசிக்குமென்றும்பிரதிவா திக்கப்படுகிறதேபலம்.

வினா. அர்த்தவாதமாவதேதென்னில்,

விடை. எந்தவஸ்துவைக் கேட்டமாத்திரத்தில் கேட்கப்படாத வஸ்துவே ட்கப்படுகின்றது எந்தவஸ்துவை மனனம்பண்ணின மாத்திரத் தில் மனனம்பண்ணப்படாத வஸ்து மனனம்பண்ணப்படுகின்றது எந்த வஸ்துவையறிந்தமாத்திரத்தில் அறியப்படாதவஸ்து அறியப்படுகின்றது அதுவேபஞ்சகிர்த்தியங்கட்காதாரபூதமானகர்த்திருத்வமாய்விளங்குவதெ ன்றும் பிரதிபாதிக்கின்றதே அர்த்தவாதம்,

வினா, உற்பத்தியாவதேதென்னில்.

விடை. கடத்திற்குமண்ணும் தந்துவுக்குலண்டும் ஆயுதங்களுக்கிரும்பும் காரணமாவதுபோலத்தோற்றப்பட்ட நாமரூபசெகத்துக்குப்பி

ரமமேகாரணமென்றுஜெகத்துக்கும்பிரமத்துக்கும் அபின்னத்துவம்பிர
திபாதிக்கின்றதே உற்பத்தி இந்த அஷ்டப்பிரமாண ஷட்லிங்கதாற்பரி
யங்களைச் சற்குருசாஸ்திர முன்னிலையிற் கேள்விப்படுகிறதே சிரவணம்.

வினா: மனனமாவதேதென்னில்.

விடை: வேதாந்தசாஸ்திரங்களிற் சிரவணம்பண்ணின அர்த்த விதமான பிரத்தியேகாத்மசொரூபத்தை அநுகூலமானயுத்திவிருத்தியால ளப்பிட்டு நிச்சயிப்பது மனனம்.

வினா: நிதித்தியாசனமாவதேதென்னில்,

விடை: விசாதீயமானதேகேந்திரியாதிகளைச்சசாதீயமான அகண்டாகார விருத்தியோடு கூட்டிமலையினுச்சியில்விட்ட தயிலதாரைபோல இடைவிடாமல்அகண்டாகாரவிருத்தியிற் சதாதியானித்து நிற்பதேநி தித்தியாசனம், இப்படிஷட்லிங்கதாற்பரியத்துடன் கேள்விப்பட்டசிர வணத்தில் ஒருவனுக்கெதுவரையில் அஞ்ஞானபுத்தி நீங்கவில்லையோ அதுவரையிலும்சிரவணம்பண்ணவேண்டும் - இப்படிசிரவணம் பண்ணிநிச்சயித்தபொருளில் எதுவரையில்சம்சயபுத்தி நீங்கவில்லையோ அதுவரையிலும்யுத்திதர்க்கவனுமானவுதவிகளால் மனனம்பண்ணவேண்டும், இப்படி மனனம் பண்ணித்திடங்கொண்டவறிவில் எதுவரையில் யானெனதென்னும் விபரீதபுத்தி நீங்கவில்லையோ அதுவரையிலும் மந்திரயோக முதலியவைவகையோ காப்பியாசவுதவிகளால் நிதித்தியாசனம் பண்ணவேண்டும்.

வினா, அதேதென்னில்,

விடை. அபரோட்சசாட்சாத்கார சிரவணத்தில் குதர்க்கங்களுடன்கூடிய நிச்சயமானது எவ்வளவுகாலநாசப்படவில்லையோ அவ்வளவுகாலமுமஞ்ஞானம்போகாது ஆதலால்மோட்சதாகங்கொண்டவன் தியானசமாதிகளையவசியம்பண்ணவேண்டியது.

வினா. அந்தத்தியானசமாதிகளெத்தனைவிதமென்னில்.

விடை. சவிகற்பசமாதியென்றும் நிருவிகற்பசமாதியென்றுமிரண்டுவி தமாயிருக்கும்.

வினா. சவிகற்பசமாதியாவதேதென்னில்.

விடை. ஞாதுருஞானஞேயம் என்னுந்திரிபுடிகளுண்டு அவற்றுள்தே கமேதாமென்பது அசுத்தஞாதுரு அறிவேதாமென்பது சுத்த ஞாதுரு இந்தஞாதுருவேஞானமென்னுமனத்தோடுகூடி ஞானேந்திரிய வழிகளால் விருப்புவெறுப் பென்றறிவது அசுத்தஞானம்-இந்திரியவழி களினறிவாகிய அசுத்தஞானத்தைப் பொய்யறிவென்றறிந்ததே மெய்ஞ் ஞானதுரியமாகியசுத்தஞானம் - பூதங்களானது தடித்து பவுதிகங்களாய் னதிரோசத்தாதிவிடயங்களாய்த்தோற்றுவது அசுத்தஞேயம்இந்தச்சத்தா திவிடயங்களனைத்தையுஞ்சொரூபமாத்திரமாய்க்காண்பதே சுத்தஞேயம் ஆதலால் இவ்வசுத்தத்திரிபுடிகளை லயம்பண்ணிச் சுத்தத்திரிபுடிகளுக்கு லயம்வாராதபடிஞேயமாயிருக்கிறகேவலப்பரப்பிரம வஸ்துவினிடத்தில் மனம்நிலைத்துத்தான்பிரமாகாரமாயிருப்பதேசவிகற்பசமாதி.

வினா, அதெப்படியென்னில்,

விடை- மண்ணாலாகியபாண்டம்மண்ணாயிருந்தும் பார்க்கிறவர்கண்களு க்குப்பாண்டமென்றெப்படி காணப்படுகின்றதோ அதுபோல ஞாதுருஞானஞேயங்களான சுத்தத்திரிபுடியானமனமும் சத்தாகிய சின் மாத்திரமானபிரமத்தினிடத்தில் சின்மாத்திரமாகவே விளங்குகின்றதாத லால் சவிகற்பசமாதியென்றுபெரியோர்கள்சொல்லுவார்கள்,

வினா, நிருவிகற்பசமாதியாவதேதென்னில்,

விடை, ஞாதுருஞானஞேயங்களானசுத்தத்திரிபுடியென்கிறமனோவாச னையுநீக்கிஞேயமாத்திரமான பரப்பிரமசொரூபந்தானேதே நி ருவிகற்பசமாதி,

வினா, அதெப்படியென்னில்,

விடை, அப்பிற்கரைந்த வுப்பானது உப்பென்றுவேறாகாமல் அப்புமா

த்திரமாயிருந்ததுபோல - பிரமாகாரமான மனம் பிரமமாத்திர மாய்நிலைத்துத்திரிபுடிமுதலான சங்கற்பவிகற்பங்களின்றிச் சத்தாமாத்திர மான பிரமசொருபமாய்விளங்குகின்றதால் நிருவிகற்பசமாதியென்றுபெ ரியோர்கள்சொல்லுவார்கள் - இவ்விருவகைச்சமாதிகளில் மனோபேதமி ருப்பினும் சமாதிசுழுத்தியிரண்டினுள் மனோநாசஞ்சமமாய்க்காணு மையாலும் சுழுத்தியில் அஞ்ஞானங்காணப் படுகையினாலும் சமாதியில் அஞ்ஞானங்காணப்படாமையினாலும் அஞ்ஞானமும் அஞ்ஞான காரிய மான சந்தேகவிபரீதமுமற்றுப் பிரமஞானத்திற்கு ஒருவிக்கினமுமின்றி ச்சதாசொருபானந்தமுண்டாகும் பொருட்டுமோட்சதாகியானவன் அக ம்புறமென்னும் பேதத்தால் அறுவகைப்பட்டிருக்கின்ற ஷட்விதசமாதி களிலும் அவசியம் அப்பியாசம்பண்ணவேண்டும்.

வினா. ஷட்விதசமாதிகளாவதேதென்னில்.

விடை. அந்தர்திரிசயானுவித்தம் அந்தர்சத்தானுவித்தம் அந்தர்நிருவி கற்பம்பாகிய திரிசயானுவித்தம் பாகியசத்தானுவித்தம் பாகிய நிருவிகற்பம் என அறுவகைகளாம்.

வினா. அந்தர்திரிசயானுவித்தமாவதேதென்னில்.

விடை. அறிவுதானே திரிசயங்களாகிய காமக்குரோதாதி விருத்தியிற் கூடி அவ்விருத்திகட்குச் சாட்சியாகத்தானேயிருக்கிற சொருபானு சந்தானம் பண்ணுகிறதே அகத்திரிசயானுவித்தம் மேலும் நான் எனக்கு ஏதென்கிற காமக்குரோதாதிவிருத்திகளை எந்த அறிவினாலறியப்படுகிற தோ அந்தத்திருக்குருபமானவறிவுக்கு அகங்காரமுதலிய காமாதிகளே திரிசயங்கள் இந்தக்காமாதிவிருத்திகளையும் அவிகாரியாகப் பார்க்கிறசா ட்சியாகத்தன்னைப்பார்க்கிறவன் நிஷ்கிரியனாகவேயிருப்பன் இந்தக்காமா திவிருத்திகட்கெல்லாம் நான்சாட்சி என்றுமிந்தவிருத்திகள்காணப்படுகி றதென்றுதன்னைச்சாட்சியாயறிந்தவன்சாட்சியாகவேயிருப்பன் ஆதலா ற்றிரிசயமாயிருக்கிறதேகாதிசகத்தையும் ஆத்மாவாயிருக்கிறதன்னிடத்தி லேலயம்பண்ணவேண்டும்.

வினா: லயம்பண்ணுமனுபவமெப்படியென்னில்.

விடை, நான்தேகமும்பிராணாதிவாயுக்களும் அகங்காரமும்மனமும் புத்தியுஞ்சித்தமும் ஞானேந்திரியங்களும் கன்மேந்திரியங்களுமல்ல இவைகளுக்கெல்லாஞ்சாட்சியாகியும்நித்தியமாகியுமிருக்கிறபிரத்தியகாத்மசொரூபமேநான், நான் ஸ்தூலமுஞ்சூட்சுமமும்வளர்ந்தவனுங்குறைந்தவனும் பாலனும் யௌவனனும் விருத்தனும் ஊமையுந்தொண்டியும் மூக்கனையனும்வந்தவனும் போனவனும் கொன்றவனும் கொல்லப்பட்டவனும் கர்த்தாவும் போக்தாவும் சொல்லுகிறவனுஞ் சொல்லப்படுகிறவனும் சுகியும் துக்கியும் யோகியும் நியோகியும் ராகியும் விராகியும் காமியும் குரோதியும் லோபியும் பந்தனும் முத்தனுமல்ல இவைகளுக்கெல்லாஞ் சாட்சியாகியு நித்தியமாகியுமிருக்கிறபிரத்தியகாத்மசொரூபமே நான்-நான் உட்பிரக்ஞனுமல்ல வெளிப்பிரக்ஞனுமல்ல அறியப்படுகிறவனுமல்ல அறியப்படாதவனுமல்ல இந்தத் தேகேந்திரியாதிகளுடைய கூட்டரவுமெனக்கில்லைபுண்ணியபாவங்களுமில்லைபசிதாகமுதலான ஷடூர்மிகளுக்குமப்பாற்பட்ட சதாவிமுத்தமான கேவலசித்ரூபமே நான் என்றுதன்சொரூபத்தைத் தானே கண்டுகொண்டுகாணப்பட்ட திரிசயங்களெல்லாம் தனக்குள் லயம்பண்ணிக் கொண்டிருக்கவேண்டும் பிராந்தியினாற்காணுகிறவிபரீதபாவனைகளைவிவேகிநீங்கிநிற்பன்.

வினா, அதெப்படியென்னில்,

விடை, செகத்விபரீதபாவநீங்கிச்சுயம்பிரகாசமான ஆத்மசொரூபமானதே முத்தியென்றுசுருதிஸ்மிருதிகள் சொல்லுகின்றபடியால்சதாமனதை யொடுக்குகிறவனுக்கே இந்தச் சமாதிசித்திக்கும் இல்லாவிட்டாற்சித்தியாகாது ஆகையால்சதாமனதையொடுக்கவேண்டும் இது வன்றி ஒருவேஷத்தினாலும் பாஷையினாலும் இந்த அகண்ட சச்சிதானந்தவஸ்துப ஞ்சித்திக்கமாட்டாது அதுசித்திக்கும்பொருட்டு அநாதிப்பிரியமான தன்னிடத்தில் அகங்காராதிகளையுமதன்விகாரங்களையும்லயம்பண்ணவேண்டும் எவனொருவன் ஆத்துமதத்துவத்தை யபேட்சித்து இரு

ரியை நாசம்பண்ணுகிறானே அவனே முத்தன் அதுவல்லாமல் கோடிக
ற்கருமங்கள் பண்ணினாலுமுத்தனாக மாட்டானென்று எசுர்வேதத்திலுஞ்
சுவேதஸ்வதாவுபநிஷத்திலுஞ் சொல்லுகின்றது அன்றியுஞ்சுயம்பிரகாச
மானவாத்மாவையறிந்தவன் சகலஅஞ்ஞானபாவங்களையுமறுத்து ஜெனன
மரணசம்சாரமானகிலேசங்களைவிட்டொழிவானென்று சகல வேதாந்தசா
ஸ்திரங்களுஞ்சொல்லுகிறபடியால் சகல கிலேசங்களையும் விட்டொழிகி
றதே ஜென்மமொழிகிறது அதுவேதமீண்டும்பிறவாதமுத்தி.

வினா, கிலேசத்தையொழிக்கும்விதமெப்படியென்னில்,

விடை, ஆத்மநிஷ்டையினாலொழிக்கவேண்டியதாகையால்மோட்சதாகிய
னவன் சதாகாலமுநிஷ்டைபண்ணவேண்டும் ஜென்மவாசனையை
த்தவிரப்புருஷனுக்குவேறு விரோதிகளில்லை ஆதலாற்சகலவாச
னைகளுஞ் சமாதிநிஷ்டையாகிய ஞானக்கினியினால் தகிக்கப்பட்
டால்மீண்டுஞ்சென்மத்திற்கேதுவாகமாட்டாது.

வினா. அதெப்படியென்னில்,

விடை, அக்கினியினால் வறுபட்டவித்துமுளைக்கிற தற்கேதுவாகாதது
போலஞானக்கினியினால் தகிக்கப்பட்டவாசனரூபமான கிலேச
ங்கள் மறுசென்மத்திற் கேதுவாகமாட்டாது ஆதலால் மோட்சவானவர்
கள் அசேஷவாசனக்ஷயமும் விபரீதபாவநிவிர்த்தியும் உண்டாகும்பொ
ருட்டு பிரயத்தினம் பண்ணியாகிலும் சதாஞானசமாதியிற் பழகவேண்
டியது இப்படிப்பட்டஞானநிஷ்டையுடையவனுக்குக் கன்மம்வேண்டிய
தில்லைகன்மத்துக்குஞ்ஞானநிஷ்டைக்குமொன்றுங் கூட்டாவுசித்தியாது

வினா, அதெப்படியென்னில்,

விடை, தேகாத்மபுத்தியோடு கூடின கர்த்ருத்வபாவனையைக் கெடுப்ப
து ஞானம் ஆதலாலொன்றுக்கொன்று விரோதமானஞானகன்ம
ங்களுக்கெப்படி ஐக்கியங்கூடும் தேஜஸ் திமிரங்களுக்கெப்படிகூட்டா
வில்லையோ மேற்குமுகம் பார்க்கிறவனுக்கு கிழக்குமுகம் பார்க்கிறக
ண்ணிமைத்து விழிக்கிறதற் கெப்படி கூட்டா வில்லையோ அப்படியே

அந்தர் திருஷ்டியான ஞானநிஷ்டர்களுக்குப் பகிர் திருஷ்டியா
னகன்மங்களிற்கூட்டாவில்லை ஆதலால் நிஷ்டாபரனாயிருக்கிறவனுக்குக்க
ர்மதந்திரத்தொழிலிலவகாசமில்லை.

வினா. மற்றெதினுண்டென்னில்.

விடை. கிரியாகாரணத்தாற்சாதிக்கப்படுகிற கன்மங்களெல்லாம் அசத்தாகையா
லந்தமித்தையையென்று சகலதரிசனங்களையுந் தள்ளியிருக்குமி
டமிருந்தேசாரூபத்தில் நிலைத்திருப்பதால் அந்தநிலைமைய சந்நியாசத்தையும்
அதுவேயநுஷ்டானம் அதுவேவிரதம் அதுவேசகலாமயிப்புமாகையால்
அந்தச்சுத்தமான பரமார்த்தத்தையடைந்திருக்கிற சற்புருஷர்களுக்கு
சகலமும் ஞானநிஷ்டையைத் தவிர வேறில்லை சகலமும் விட்டுத்துறந்து
ஞானநிஷ்டாபரராயிருக்கிற சந்நியாசிகளுக்கு வேறே கிரியாசாதனங்க
ளொன்றுமில்லை ஆதலாற்கிரியாந்தரங்களான தொழில்களெல்லாம் விட்டு
த்து நிஷ்டாபரனாகவேயிருக்கவேண்டும் ஞானமேடையிலேறுதலை
யபேக்ஷித்திருக்கிற முமுக்ஷுவானவன் ஆத்மநிஷ்டையாகிற சன்னியாசத்தை
யுண்டாக்கும் சஞ்சலாகிதமாய் சதா ஆத்மபராயணனாய் ஆத்மசொரூபத்
தில் நிலைத்திருக்கவேண்டும் ஞானமேடையிலேறவேண்டியதே பலனாயுள்
ள அப்பியாசிக்கு ஞானநிஷ்டா சாதனங்களே கன்மங்கள் யோகமானமே
டையிலேறவேண்டின முமுக்ஷுவுக்கு யோகத்தைத் தவிர வேறுகிரியாந்த
ரங்களொன்றுமில்லை ஒருவன் யோகியாயிருந்து வேறுகிரியாந்தரங்க
ளை நினைத்தால் மாத்திரம் மேலேறித்தவறினவனெப்படி கீழேவிழுவானோ
அப்படியே யதோகதியில் விழுந்துவிடுவான் = ஞானமேடையிலேறியி
ருக்கிற கிருதகிருத்திய ஞானிக்கு வெளியில் செய்காரியமொன்றுமி
ல்லை இதுவே அந்தர்த்திரியாநுவித்த சவிகற்ப சமாதி,

வினா அந்தர்சத்தாநுவித்தமாவதென்னவென்னில்.

விடை, சத்துசின்மாத்திரமாய்ச்சேஷிக்கப்பட்டதத்துவங்கூடிய அச
ங்கன் சுயம்பிரகாசன் அத்விதீயனென்கிற சத்தங்களைப்
பொருந்தி அந்தச்சத்தங்களைத் தானாகப்பாவித்தபாவனை யெதுவோ
அதுவே அந்தர்சத்தாநுவித்தம்.

வி௵ இதற்கனுபவமெப்படியென்னில்,

விடை. நான் சுத்தன் சாந்தன் அனந்தன் முன் பின்னெதிரில்லாதவன் உள்ளும்புறமுநிறைந்த பரிபூரணன் ஆனந்தனாயிருக்கிறவன் ஜெனனமரணமில்லாதவன் நித்தியானந்தமான அத்வைதன் என்றும்பிரத்தியேகவஸ்துவென்றும் அகண்டமென்றும் சச்சிதானந்தலட்சணமென்றும் சுத்தமென்றுஞ்சுருதிகளிற்சொல்லப்பட்டபரஞ்சோதியானபிரமமெநானே அநுவேறாவென்னுஞ்சத்தமாத்திரமாயிருக்கிறவிருத்தியோடுகூடிசத்தானுமானியமானசத்தத்தைப் பொருந்திசஞ்சலமில்லாமல் சமாதிநிச்சயத்தினாற் சொரூபத்திலேலயம்பண்ணி சுத்தோகமுதலான சத்தங்களுடன் திருக்கேபிரதானமானபாவனையைச் சாதிக்கவேண்டும் இதுவே அந்தர் சத்தானுவித்தசவிகற்பசமாதி.

வி௵ அந்தர்நிருவிகற்பமாவதேதென்னில்,

விடை, கிரியானுவித்தம் சத்தானுவித்த மிரண்டும் விட்டொழிந்த மனோவியாபாரத்தையுங்கட்டோடே விட்டொழிகிறதே அந்தர் நிருவிகற்பம் எவனொருவன் முன்சொன்னசவிகற்பசமாதியையன்புடன் கூடியிடைவிடாமல் நெடுநாள் பழகுகிறானோ அவனுக்கு வாசனைக்ஷயமுஞ்சித்தலயமுந்தடையற்ற நிரதிசயவானந்தமுஞ்சித்திக்கும் இந்தலட்சணம் பொருந்தினயோகியானவன் உள்ளும்புறமுங்காணாமல் ஆனந்தாமிர்தக் கடலிலழுந்தினவனாய்த் தன்னைவிட வன்னியமில்லாதவனாயிருப்பன் ஆதலால்நிருவிகற்பமாகிய பரப்பிரமசொரூபநிஷ்டையைப்பொருந்தினவர்களே ஜீவன்முத்தர்கள் அவர்களே ஜீவத்தன்மை பொருந்தியும் பொருந்தாமலிருக்கிறவர்களென்றறிக, ஒருவன் இந்த மூவித சமாதியும் அப்பியாசத்திற்பழகினனுபோல பகிர்முகத்திலும் மூவித நிவிர்த்தியாகும் பொருட்டு பாகியகிரியானுவித்த சத்தானுவித்த நிருவிகற்பமென்னு மூவிதசமாதிகளையும்பழகவேண்டும்,

வி௵ பாகியகிரியானுவித்தமாவதேதென்னில்,

விடை, அதிஷ்டானமாய்ச்சச்சிதானந்தமான பரப்பிரமவஸ்துவில்கற்பி

தமாக நாமரூபாதிசெகத்து விளங்குகிறது எப்படியென்றால் நு
ரிர்ச்சிவெண்மை நெகிழ்ச்சிருளாதியலை யென்கிறபேருமொன்றாய்க்கூ
டின சலத்தை அலையென்பதுபோல சச்சிதானந்த நாமரூபங்களிரண்டு
மொன்றாய்க்கூடின சொரூபத்தைப் பிரபஞ்சமென்று சொல்லப்படுகிற
தென்று ஆரோபிதமான நாமரூபமிரண்டையுந் தள்ளி அதிஷ்டானமா
னசச்சிதானந்த சொரூபமாத்திரமாய்க் காண்பதே பாகியதிரிசயானுவித்
தம்மேலும் சச்சிதானந்தபிரமத்தைத் தவிர நாமரூபங்களில்லை யென்று
நாமரூபங்களைவேறுபடுத்தி அதிஷ்டான சொரூபத்தி லாரோபிதங்களை
யைக்யபண்ணி அத்வைதவஸ்துவே நானென்று சதாபஜனை பண்ணவே
ண்டும்.

விரு இதற்கனுபவமெப்படியென்னில்.

விடை, இந்தப்பஞ்சபூதங்களும்பஞ்சபூதகாரியங்களும் நானல்ல இவை
க்கெல்லாமதிஷ்டானமாகியும்விசுத்தமாகியும் சத்தாகியுமிருக்கிற
பிரமமேதுவோ அதுவேநான்காணப்பட்ட பதார்த்தங்களும் குணங்களு
ம் கிரியைகளுஞ்சாதியும் சத்தாதியஞ்சவிடயங்களும் இந்திரியங்களும்பி
ராணனும்மனமும்புத்தியும் அகங்காராதிகளும் நானல்லஇவைக்கெல்லா
மதிஷ்டானமாகியும் ஏகமாகியும் விசுத்தமாகியும் சத்தாகியும் பரமாத்மா
வாகியுமிருக்கிற பிரமமேநான்திரிசயமான நாமரூபங்களெல்லாம்பொய்
இதற்கதிஷ்டானப்பிரமமேசதாசத்திய மென்றுபாவித்துநடக்கும்போ
தும் இருக்கும்போதும் சதாத்தியானித்திருக்கவேண்டும் இதுவே பாகிய
திரிசயானுவித்தசவிகற்பசமாதி.

விரு, பாகியசத்தானுவித்தமாவதேதென்னில்,

விடை. அதிஷ்டானமானசச்சிதானந்தத்தில் கற்பிதமான நாமரூபங்களை
லயம்பண்ணி நிருமலமாகியும் அத்வைதமாகியும் பரமானந்த
மாகியுமிருக்கிறபிரமமே நானென்கிறபாவனையைப் பொருந்தியி
ருப்பது பாகியசத்தானுவித்தம்.

விரு. இதற்கனுபவமெப்படியென்னில்,

விடை, நிருவிகாரமாகியும் நிராகாரமாகியும் நிரஞ்சனமாகியும் அரூப
மாகியும் ஆதியந்தரகிதமாகியும் சத்தியமாகியும் சுத்தமாகியும்
புத்தமாகியும் சுதந்திரமாகியும் பரமாகியும் பிரத்தியேகாத்மாவாகியும் அ
கண்டமாகியும் சொப்பிரகாசமாகியும் நிராகாசமாகியும் அத்தியந்தசூட்சு
மமாகியும் நிருவிகற்பமாகியும் கேவலமாகியும் பரமாத்மாவாகியு மிருக்கி
றபிரமமே நான் இதிற்சந்தேகமில்லையென்று நிருவிகாரமாகி சத்தங்களு
டன்கூடிக்கேவலமான வஸ்து லட்சியத்தில் மனதை நிறுத்தித்தியானம்ப
ண்ணவேண்டும் இதுவே பாகியசத்தானுவித்தசவிகற்ப சமாதி.

வினா, பாகியநிருவிகற்பமாவதேதென்னில்.

௬ விடை, பிரமானந்தபரவசத்தினால்சொரூபத்தோற்றமாய்க் கலந்துப
தத்திறசகலகிரியைகளுமற்று நிச்சலமாயிருப்பதே பாகியநிரு
விகற்ப மம் இப்படிப்பட்ட யோகியானவன் எழுந்திருக்கும்போதும் இரு
க்கும்போ யாறு மறவாமலிந்திரியநிக்கிரகம்பண்ணிச்சாவதானமாய் இந்தச்
சமாதியா றையுஞ்செய்யவேண்டும்.

வினா. எவ்வளவுகாலஞ்செய்யவேண்டுமென்னில்.

விடை. எவ்வளவுகாலம் விபரீதபாவனை போகவில்லையோ அவ்வளவுகால
ஞ்செய்யவேண்டும் மேலும் மோட்சகாமியானவன் அந்தரியாமி
யானவ ஷட்விதசமாதிகளையும் ஒருக்காலுமறந்திருக்கப்படாது மறப்ப
னேயானால் சூரியனில்லாதவிடத் திருள்மூடுவதுபோல சொரூபமான ஆத்
ரகாசத்தை ம னையயாகிய இருள்மூடிக் கொள்ளும் ஆதலால் தடையற்று
சொரூபானுவப்பிரகாசமான அது எவ்வளவுகாலஞ் சித்திக்கவில்லையோ அ
வ்வளவுகாலமும் இந்தஆறுவகைச்சமாதியில் நிரந்தரம்பொருந்த போத
கவேண்டும் பெரியோர்களானபேர் சுவானுபவத்தைவிட்டு க்ஷணப்பொழு
தும்பிரிந்திருப்பதில்லை சுவானுபவத்தைமறந்திருப்பதே மிருத்யு இ
வல்லாமல் வேறேமிருத்தியுவில்லையென்று சுருதிஸ்மிருதிகளிற் சொல்
லுகின்றது ஆதலால் இந்த ஆறுவகைச்சமாதியிலும் எவன்ப்பொருந்தியிருப்பானோ
அவன்மனதிற்சொருவிகற்பமுந்தோற்றாது இந்தஅப்பியாசத்தினால் ஸ்
வாத்மபாவஞ்சித்திக்கும் - இதுவேகைவல்லியம், சர்வாத்மபாவம் பொருந்

னென்றேபிரமவித்திபாடல்லென்றுபெரியோர்கள்சொல்லுவார்கள் சிவஞா
னநேத்திரனுக்கும் சுவ்புருத்தாருபிருக்கிற ஆனந்தானுபவமேபிரயோசனம்
ரானவனுக்கு வெள்ளபூரு முதலாகிய அசத்தைக்கிரகிக்கிறதே இருதயக்
கிரந்தி இந்த இருதயக்கிரந்தியானது சமாதியில் வாசனையோடு நசித்து
போனால் பிரமமேதானாயிருக்கிற சுவானுபவத்தையடையபற்று விளங்கும்
அதுவே மோட்சத்திற்கு நேரானவழியென்று பெரியோர்கள் சொல்லு
வார்கள் இன்னந்த அர்த்தக்காரனைா யிருக்கிறவர்களுக்குச் சதாகாலமுந்
தோத்திரம் மற்றவேருக்குந்தோற்றமாட்டாது ஆகையால் மறுபிறப்பிற்கு
தானவனும் வினைகளைச் சகாரங்களையும் நன்றாய் அப்பியாசித்து இருதய
கிரந்தியைபூரணமாகவிலேனுல் நசித்துநிர்விகல்பமானந்தாபிந்தசமாதி
நிரந்தில் சுழுத்திவிளையாட்டுக்கொண்டு சந்தோஷகரமாயிருந்து தேகம்
பின்றிந்த தாகாரமாயிருக்கிறதே நிருவிகற்பசமாதி-இந்த நிருவிகற்பசமா
தியினிருப்பவனே குணத்திரயங்களையுங்கடந்தவன் இவன் தேகமாகப்போ
கியாயிருந்தாலும் குணத்திரயசத்தனைப் சம்சாரத்திற்சுழன்றுதிரிவன்.

வினா. குணத்திரயங்களைக்கடப்பதெப்படியென்னில்,

விடை. நேத்திரங்கண்டமிருதயமான சாக்கிரசொப்பன சுழுத்தியாகிய
வவஸ்தாத்திரயவிலட்சணனாயிருப்பது,இப்படியுறைந்தமான
சமாதியானது சிவஞானத்தனுக்கேசித்திக்குமன்றி மற்றொருவருக்குஞ்
சித்தியாது அசத்தாகியவிடயங்களையுனுசந்தானம் பண்ணுகிறவன்பந்த
னாயிருக்கிறவன் து சொரூபத்தையனுசந்தானம் பண்ணுகிறவன்முத்
தனென்று சுருதிகளிற் சொல்லுகின்றது ஆகையால் மோட்சதாகமானவன்
பிரயாசைப்பட்டாகிலும் சதாபிரயத்தினம்பண்ணி நிருவிகற்ப சமாதிய
டைய்வேண்டும் - இவ்வுபாயமடைந்தவனே பவபந்தச்சுழலினின்று விடுபட்
டவன்,

வினா, பவபந்தமாவதேதென்னில்,

விடை, அவித்தை ஆணவம் கன்மமாகியமூன்றும் சீவர்களுக்குப் பவபந்த
மென்றுசொல்லப்படும் இது நிருவிகற்பசமாதியினாலன்றி வே
றொன்றினாலும் நீங்காது இதற்குநான் குவிரோதமுண்டு,

வினா. நான்குவிரோதமாவதேதென்னில்,

விடை. லயம்விட்சேபம்காஷாயம்ரசாஸ்வாதம் என்பனவாம்,

வினா, லயமாவதேதென்னில்,

விடை, அகண்டாகாரவிருத்தி தமோகுணத்துடன் கூடி அகண்டவஸ்துவிற்கூடாமல்நித்திரைவருகிறதே லயம்.

வினா. இதற்குநிவிர்த்தியெப்படியென்னில்,

விடை. யூகபுத்தியினால் லயத்தைத்போக்கிவிருத்தியை நிருமலம்பண்ணிப்பிரத்தியேகாத்மஅபிமுகமாய் நாட்டவேண்டியது,

வினா. விட்சேபமாவதேதென்னில்,

விடை, அப்படிவஸ்துநிலையில்நாட்டுகிறபோது அகண்டாகாரவிருத்தி ராசதகுணதோஷத்தினால் அந்தநாட்டத்தில் நிலைக்காமல் விடயநாட்டத்திலபிமுகப்படுவதேவிட்சேபம்.

வினா, இதற்குநிவிர்த்தியெப்படியென்னில்.

விடை, அகண்டாகாரவிருத்தியினால் தானே விடயங்களிலுள்ள தோஷங்களையாரோபித்து அதைப்பிரத்தியேகாத்மவபிமுகப்படுத்திநிற்கவேண்டும்,

வினா. காஷாயமாவதேதென்னில்,

விடை, அகண்டாகாரவிருத்தியானது ராசத தாமதகுணங்களால் மூடப்பட்டு லட்சியமானபரதத்துவத்திலு மொட்டாமல் பிரபஞ்சவிடயத்தையுநாடாமல் ஸ்தம்பம் போற்சுத்தமூடமாயிருக்கப்படுகிறதே காஷாயம்,

வினா. இதற்குநிவிர்த்தியெப்படியென்னில்,

விடை, அகண்டவஸ்துவின்சுகத்தையும்அதன்மகிமையையும்சொல்வதாகவும் திரிசயங்களெல்லாந் துச்சமென்று போதிப்பதாகவுமிருக்கிறவேதாந்த சாஸ்திரார்த்தங்களை யடிக்கடிவாக்கினாற்சொல்லவேண்டியது.

வினா, ரசாஸ்வாதமாவதேதென்னில்,

விடை, அகண்டாகார விருத்தியானது தான்வைத்த நாட்டத்திலிராமல் பூர்வவாசனாவேகத்தினால் சவிகற்பமானவிஷயரசங்களைப் பொசிக்கப்போகிறதே ரசாஸ்வாதம்,

வினா, இதற்குநிவிர்த்தியெப்படியென்னில்.

விடை, வயிராக்கியபுத்தியினால் விஷயங்களிலபிமுகப்பட்டவிருத்தியைத்திருப்பிப்பிரத்தியேகாத்மவபிமுகமாய் நிறுத்தவேண்டும்-இந்தவிரோதங்களன்றிப்பின்னும் பலவிரோதங்கள் வந்தாலும் தியானசமாதிவலால் அந்தவிக்கினங்களைப்போக்கி நிருவிகற்பசமாதியையே அப்பி

யாசிக்கவேண்டும், விடயங்களில் இந்திரியங்கள்செல்லாதபடிமனோநிக்கிரகம் பண்ணுகிறவனேதீரன் அவனேதீவிரதரமோட்சதாகியும் சகலவிருப்புவெறுப்பற்றவனுமாயிருப்பன் - அவனைக்கண்டமாத்திரத்திற் றுபத்திரயாதிசோகமோகங்களெல்லாம் பறந்தோடிப்போம் - அப்பால் சகலவிக்கினங்களையும் போக்கி ரட்சிக்கிறவராயிருக்கின்ற பரமேஸ்வரன் அவனிடத்தில் எப்போதும் உன்மன்னியராய் நின்று அவனாலருச்சிக்கப்பட்டு விளங்குவர் ஆதலால் மோட்சதாகியானவன் சகலவிக்கினங்களையு மொழித்து ஈஸ்வரனைப்பரமாகவைத்துக்கொண்டு ஈஸ்வரசகாயத்தினால் நிர்விகற்பசமாதியைச்செய்யவேண்டும், இப்படிப்பட்ட ராஜயோகியானவன் உள்ளும் புறம்புஞ்சொரூபத்தைத்தவிர அன்னியமில்லாதபரப்பிரமசொரூபந்தானேயாய் சகலதொழிலுமற்றுச் சும்மாவிருப்பன் இதுவேமுத்திசாதனநிலை இதைஉன்மன்னியாவஸ்தையென்றுசொல்லப்படும்,

வினா, உன்மன்னியாவஸ்தையாவதேதென்னில்,

விடை. நிருவிகற்பமாயிருக்கிற ஆத்மாவினிடத்தில் ஆத்மாகாரமாய்ஏகரூபமாயிருக்கிற அகண்டாகாரவிருத்திஞானமேயுன்மன்னியாவஸ்தையென்று பெரியோர்கள்சொல்லுவார்கள். இந்தப் பிரகாரம் அத்துவைத பரப்பிரமப்பிரகாசத்தினால் அஞ்ஞானாந்தகார நிவிர்த்தியாகித் தானேபரப்பிரமசாட்சாத்காரசொரூபமாய் விளங்கும்போது தேகேந்திரியாதிகளில் நானென்றெழுகிறஇருதயக்கிரந்தியும் சொரூபத்தைத் தெரியவொட்டாமல் மறைத்திருந்த சம்சயங்களும் சகல கன்மங்களும் அஞ்ஞானதுக்கமாதலாலதையடியோடு நாசம்பண்ணினவனே பிரமவித்து அவனேசிரேஷ்டன் அவனே சகலபந்தங்களுமொழிந்தவன் இந்த நிருவிகற்பசமாதியினால் துவைததோற்றங்கள் லேசமுமில்லாமல் விட்டுக் கேவலசொரூபானந்தமாத்திரமாய் நினைப்புமறப்பாகியசுத்ததிரிபுடியுந்தோற்றிருப்பதே அபரோட்சசாட்சாத்காரநிலை இந்தச்சுவானுபூதியாகிய நடுநிலையில் விடயமுமில்லை புசிப்பவனுமில்லை யாதலாலிதைத் தானேபதிஞானமென்றும் பரஞானமென்றுஞ்சொரூபஞானமென்றுஞ் சொல்லுவார்கள்,

வினா, இன்னம் பலவகையாகச்சொல்லுகின்ற முத்திநிச்சயங்களேதென்னில்.

விடை. அசைவறத்தெளிந்தவிடமே முத்தியென்றும் மும்மலநீங்கினவிடமே முத்தியென்றும் சாக்கிராதீதமே முத்தியென்றும் நினை

ப்பறந்தினைத்தமுத்தீப்பாமாறுவாய் பேரொளியாய் நின்றவிடமே முத்தியென்றும் மூப்பாமுக்கடந்த விடமே முத்தியென்றும் சதுர்த்திரிபுடி நீக்கினவிடமே முத்தியென்றும் [illegible] கேவலமாகிய நினைப்பு மறப்பற்ற விடமே முத்தியென்றும் [illegible] முத்தியென்றும் இவ் யாத்திரமே முத்தியென்றும் [illegible] றுநீக்கினவிடமே முத்தியென்றும் பலசூலசாஸ்திரங்களிற் கூறப்பட்டிருக்கின்றது இதுவெல்லாம் அபேட்சை [illegible] பவத்தித் சமமாயிருக்கும் இதுவல்லாமல் வேதபாரியமாகிய புறமதங்களில் ஸ்திரீசையோகமே முத்தியென்றும் [illegible] மறிவுமே முக்தியென்றும் நிராகுமையடைக்கூடுமே முக்தியென்றும் இருவினையுமெதிலைதே முக்தியென்றும் பாஷாணமாயிருப்பதே முத்தியென்றும் விதேகமுக்தாவித முத்தியென்றும் சிவத்துவங்கெடுவதே முத்தியென்று பலவிதங்களாகச்சொல்லுவதெல்லாம் முத்தியல்லவென்று பெரியோர்கள் சொல்லுவார்கள். அபரோட்ச சொரூபசாட்சாத்காரமாகியபிரமானுபூதியாலாசத்தினால் சொரூபவியாபகத்திலே ஏகமாய் பரம்பிரகாசமே நாம் [illegible] ஆனந்தமாயிருப்பதே மனுஷத்தமாய் விளங்கும் நிருவிகற்பமான விதேகமுத்தியென்றறியவேண்டியது-சித்தம். மோக்ஷவிருப்பங்கொண்ட அதிதீவிரபக்குவனான ஒருவன் நித்தியாநித்தியவஸ்துவிவேகங்களோடுசெய்பவனாகில் இருவினையொப்பும் மலபரிபாகம் பிறந்து அதனால் சத்தினிபாதமுண்டாய்ச் சற்குருவினையடைந்து [illegible] தில் அவனுக்குயிர்க்குயிராய் நின்ற ஆனந்தசாமி [illegible] பிரமமே குருவடிவாய் சரீரித்து ஆசிரியமூர்த்தியாய் முன்வந்து பிரமோபதேசமான ஞானதீட்சை செய்து ஞானசாஸ்திரார்த்தங்களையோதிச் சுருக்கம் அதைக்கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து ஞானநிஷ்டைகூடி நிருவிகற்பசமாதியோகத்தை யோட்சாத்தியடைந்தான் பெற்றவே உலகம் பெறவேண்டுமென்னும்கருத்தால் உலகத்தில் சஞ்சரிப்போயாகிய ஜீவன்முத்தனாய்வசித்திருப்பன் அந்த மகானுடையவனால் பின்னுள்ளபக்குவர்களுக்கும் உபதேசமுதலான தானதருமம் இந்தச்சந்ததியில்லை யென்றறியவேண்டியது-சித்தம்.

ஆறவது - உபசாந்திப்பிரகரண முற்றிற்று.

நவநீதசாரமுற்றும்.